அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

ACC. NO. 18586

Page. No. 53.

மலர்: 8 இதழ் 2 விலை அ. 4	துன்முகி௵ வைகாசி௴ மே-ஜூன் — 1956	வருட சந்தா ரூ. 2-4-0



அப்பர் பெருமானும், அப்பூதி அடிகளும்
(பெரியபுராணச் சித்திர விளக்கம் 26; பக்கம் 81)

பொருளடக்கம்

பக்கம்

1. அடியவர் வாழ் அன்பு நிலை (திருப்புகழ் மணி) ... 49
2. தஞ்சமடைதல் (அனுபூதி விளக்கம்) (கி. வா. ஜகந்நாதன்) ... 51
3. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.,) 56
4. நாணமும் நகையும் - 2 ...(அன்பன்) ... 62
5. அன்பின் சக்தி (ஆ. கி. ரங்கராஜன்) ... 66
6. ஆணலார், பெண்ணர் (வா. ராமலிங்கம் பிள்ளை) ... 73
7. சுப்ரமண்ய ஸ்வாமிகள் (ரசபதி) ... 74
8. அப்பூதியடிகள் (கி. வா. ஜ.) ... 81
9. திருப்புகழ் விரிவுரை—திருப்பரங்குன்றம் (குகஸ்ரீ) ... 87
10. The Lord of the Forest *(Thiruppugal Mani)* ... 94

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ᾽ முதல் பங்குனி மீ᾽ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட. ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில் லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே துன்முகி ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ᾽ முதல் உள்ள முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தா தாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, **54,** பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ௵ வைகாசி மீ மே—ஜூன் - 1956	இதழ் 2

அடியவர்வாழ் அன்புநிலை

(திருப்புகழ் மணி)

அடியார்களும் அன்பர்களும் பக்தர்கள் எனப் படுவர். பக்தி நிலையில் பயின்று பக்தி எனும் யோக வாழ்வை அடைந்தவர்க்கு பக்தியே முக்தியாகும். பக்தியினுடைய அனுபவமே,ஆண்டவனை அனுபவித்த வாறாகும். ஆண்டவனை எப்படி அனுபவிப்பது? எப்படி அவனைத் தெரிந்து கொள்வது? எப்படி இரண் டறக் கலப்பது? என்றால், அதற்குப் பக்தி மார்க்கத் தைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறினார் கிருஷ்ணர். அந்த சுலோகம் பின் வருமாறு:....“பக்த் யாத்வனன்ய சக்யா அகமேவம் விதோர்ஜுனா”.

பக்தி யென்பது ஆண்டவனை அடைய வேண்டு மென்ற ஆராத காதல். பக்தர்கள் காதல் அவர்களுடைய இரத்தத்திலும், மூச்சிலும் குடிகொண் டிருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் ஆண்டவனுடைய கீர்த்தனங்

கந்தா முருகையா கைலாயம் வாழ்சிவனார்
மைந்தா மயில்வாகா மான்மருகா வாராயோ,

களையே பாடிக்கொண் டிருப்பார்களாம். இப்படி நாம சங்கீர்த்தனத்தால் பாடும் தொண்டருக்கு, பகவான் அன்பு அவர்கள் இரத்தத்திலேயே கலந்திருக்கும்.

இது ஒருவாறு இராமாயணத்தில் விளங்கு கின்றது. வாலி இராமனை சாதாரண மனிதனென் றெண்ணித் தன்னை மறைந்து அடித்ததால் மிகவும் ஏசினன். பிறகு சிறிது நேரத்திற் கெல்லாம் இராம னுடைய தெய்வீகப் பண்பைத் தெரிந்து அவனைப் போற்றினன். "மூவர் நீ; முதல்வன் நீ; ஆவிபோம் வேளையில் அறிவு தந்துதவினய்" என்று கூறிப் பாராட்டினன். அதுவரையில் காணத இராமனை எப்படிக் கண்டான்? அவன் மார்பில் புதைந்த அம்பி லுள்ள 'இராம' என்ற அக்ஷரம், அவன் இரத்தத்தில் கலந்து கருத்தில் கலந்து ஆவியிலும் கலந்துவிட்டது போலும். இது போலவே மூக்கு அறுபட்ட சூர்ப்ப னகை, 'இராம' எனும் நாமம் அவள் இரத்தத்தில் கலந்து அவளுக்கு அறிவூட்டிய வேளையில் இராமனை நன்கறிந்து கொண்டாள்.

"அந்தமில் தவத்தொழினர் யாரவரையொப்பார்" என்ருள். இவ்விருவரும் இராம நாமத்தைத் தங்கள் இரத்தத் தினில் கலக்கப் பெற்ருர், களங்கமற்ருர், அறிவுற்ருர், அருள் பெற்ருர்.

தொண்டர் குழாமும், இராம சப்தத்தை நுரையீர லின் முன்பாக தங்களுடைய இரத்தத்திலேயே கலந்து உய்விக்கப் படுகின்ருர். ஆகாசத்தில் வாயுவிருக்க, அவைகளில் எங்கும் இராம நாமம் அடியார்கள் துதிக்

எக்குறையும் தீர ஏழைமதியேன் எதிரில்
சொக்கரது மெய்ச்சுதன் நீ தோன்றியருள் செய்யாயோ

-கத் துதிக்க நிறைந்து நிற்கிறது. அடியார்கள் ஆண்டவன் நாமத்தை உச்சரிக்கும் பொழுது, இந்த ராம சப்தம் வாயுவுடன் அவர்களது சுவாசக் குழாய்களினுட் சென்று, அங்குள்ள இரத்தக் குழாய்களில் புகுந்து விடுகின்றது. பிராண வாயுவுடன் பிராண காரணமான ஆண்டவன் ராம சப்தங்கள், இவ்விதம் அடியார்களது இரத்தத்தில் கலந்து விடுகின்றன.

சத்சங்கத்தில் சேர்ந்த பெரியார்கள், தங்களை யறியாமலேயே பக்தியில் இழுக்கப் படுகின்றனர். ஆகையால்தான் பக்தர்கள் தொண்டர் குழாத்தை நாடுவதும், நாடினவர் ஒரேமுகமாக ஆண்டவனிடம் ஈடுபடுவதும் நேர்கிறது. ஆதிசங்கரர் இவ்வகை சத்சங்கங்களை நிர்ச்சங்கம் என்றுரைத்தார். அறிவின் கூர்மையால், இதய அன்பினுல், ராம சப்தத்தால் பக்தி தொன்று தொட்டு விஜயத்தைக் கொடுத்தும் அனுபவிக்கப்பட்டும் வருகின்றது.

அனுபூதி விளக்கம் — 9

தஞ்சம் அடைதல்

(கி. வா. ஜகந்நாதன்)

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எல்லாவற்றையும் மறந்து என்னையே சரணடைவாயாக" என்று அர்ச்சுனனுக்குக் கண்ணன் உபதேசித்தான். "கடமைகளாக உள்ள பலவற்றையும் விடுத்து வேறு புகல்

உண்ணீர்மை யில்லேன் உன்னருளுக் கயலானேன்
கண்ணீர் வழிவாழ்வில் கடைக்கணருள் செய்யாயோ

எதையும் கருதாமல் என்னையே சரணடைந்தால் யான் பாதுக்ாப்பேன்" என்று பொருள்படச் சொன்னான். அப்படிப் புகல் அடைந்தவர்களின் பாரத்தைத் தாங்கிக்கொள்ளும் பேரருள் அவனுக்கு உண்டென்பதையும் அவன் சொல்லியிருக்கிறான்.

"எல்லாக் கடமைகளையும் விடுவது" என்பது, கடமைகளைப் பெரும்பாரமாக எண்ணியவர் சோம்பேறித்தனத்தால் விடுவது அன்று. விளையாடிக் கொண்டிருக்கிற குழந்தை பிரிந்திருந்த தாயைக்கண்டவுடன் விளையாட்டையும் பொம்மைகளையும் விட்டு, "அம்மா!" என்று கூவிக் கொண்டு சென்று கட்டிக்கொள்வதைப் போல, செயல்களை மறந்து இறைவனிடம் சரணடையவேண்டும். இறைவன் ஒருவனே நமக்குப் புகல் என்ற உறுதியும், அவனை அடையவேண்டும் என்ற வேகமும் மிகுதியானால், மற்றக் கடமைகள் தாமே நழுவுகின்றன. அவனைப் பற்றிக் கொள்வதே பெரிய தர்மமாகி விடுகிறது. "எல்லாத் தர்மங்களையும் விட்டுவிடு" என்று சொன்னாலும், அவனைப் பற்றிக்கொள்வது அந்த நிலையில் பெரிய அறமாக, பெரிய கடமையாக நிற்கிறது.

இப்படிச் சரணடைகிறவர்களைக் காப்பாற்றக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான் இறைவன். இது எல்லாச் சமயத்துக்கும் பொதுவான உண்மை. இறைவனுக்குச் சரணாகத ரட்சகன் என்று ஒரு பெயர் உண்டு. இராமாயணம் முழுவதுமே சரணாகதி சாஸ்திரம் என்று கூறுவர்.

"தன்கடன்அடி யேனையும் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே"

என்பது அப்பர் திருமொழி. இறைவனுக்குத் தன்பால் அடைந்தாரைத் தாங்குவது கடனாகிறது.

இறைவன் திருவருளைப் பெறுவதற்கு அவனைத் தஞ்சமென்று புகுந்தால் போதும். இப்படிச் செய்வது மிக

ஆத்திரத்தால் ஆசைக் கடற்குள் அழுந்துமெனைக்
காத்திரமாக் கைகொடுத்து கரைசேர்ப்ப தென்றேயோ

எளிது என்று தோன்றும். உண்மையில் அது அவ்வளவு எளிது அன்று. இறைவன் இருக்கிறான் என்பதைச் சாஸ்திரங்கள் சொல்வதனாலும், பெரியவர்கள் சொல்வதனாலும் நாம் நம்புகிறோம். இறைவன் திருவருள் கிடைக்கும் என்ற எண்ணம் உறுதியாக நமக்கு இருப்பதில்லை. அப்படி வாய் சொன்னாலும் மனம் அதை நம்புவதில்லை. இறைவன் கண் முன்னாலே வந்து நின்று, "நான் காப்பாற்றுகிறேன்" என்று சொன்னாலும் நம்பாதவர்களும் உண்டு.

பலகாலமாக, பல பிறவிகளில் உலகவாழ்க்கை ஒன்றையே கண்ட ஆன்மாவுக்கு அந்த வாசனையே மீதூர்ந்து நிற்கும். உலகப் பற்று எளிதில் அழியாது. அதில் நம் பிக்கையும் போகாது. அதனால் இறைவனைப் பற்றிக் கொள்வதில் முழு நம்பிக்கை பிறவாது.

பிறவியினால் உண்டாகும் துன்பங்களையும், வாழ்க்கையின் முடிவில் மரணத்தால் உண்டாகும் துன்பத்தையும் நன்கு உணர்ந்து அஞ்சுபவர்களுக்கு உலகப்பற்று ஒழியத் தலைப்படும். பொறிகளால் நுகரும் இன்பங்களில் உவர்ப்பு ஏற்படும். சாஸ்திர விசாரத்தாலும் அநுபவத்தாலும் இந்த வெறுப்பு உண்டாகும்.

பற்று எவ்வளவு உரமானது என்பதை ஓர் உதாரணத்தால் உணர்ந்து கொள்ளலாம். அழுகி ஒழுகும் தொழு நோயுடையவர்களை மக்கள் கண்டால் பழிக்கிறார்கள். அவர்கள் அந்த நோயால் ஒவ்வொருநாளும் துன்புறுகிறார்கள்: பழிக்கும் துன்பத்துக்கும் இடமாக இருக்கும் உடம்பை விட்டொழிக்க அவர்களுக்கு மனம் வருவதில்லை. அவர்கள் உறுதியாக நினைத்தால் உயிரை விட்டுவிடலாம். ஆனால் இதை விட்டுவிட்டால் என்ன நிலை வருமோ என்று அஞ்சுகிறார்கள். இந்த உடம்பிலே உள்ள பற்று நீங்குவதில்லை.

அவர்களுக்கே உடம்பில் மனமார வெறுப்பு ஏற்படுவதில்லை என்றால், இந்திரிய இன்பங்களை நுகரும் நிலையில்

செய்யஅருள் மேனியநின் சேவடிசேர்ந் தின்பமயம்
எய்துவனோ என்றெளியேன் ஏங்குவதை எண்ணாயோ.

உள்ள மற்றவர்களுக்கு எப்படி அந்த வெறுப்பு உண்டாகும்? தூக்குத் தண்டனை பெற்ற குற்றவாளிக்கு விருந்து போட்டால் அதை அவன் சுவைக்க மாட்டான். தன் கழுத்தில் சுருக்கு ஏறப்போகிறதே என்ற நினைவுதான் அவன் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கும். நாமும் அந்த நிலையில் இருக்க வேண்டும். காலன் தன் கயிற்றை எப்போது வீசுவானே நாம் அறியோம். என்ருவது ஒரு நாள் அவன் சுருக்கிட்டு இழுப்பான் என்பது நிச்சயமாகத் தெரியும். ஆனால் அதை மனமார எண்ணி அஞ்சுவதில்லை. அதனால் தான் இறைவனைச் சரண்புகுவதில்லை.

"இறைவனைச் சரணம் அடையவேண்டுமானால் அவன் அருளின்சுவை ஓரளவாவது தெரிந்தால்தானே நம்பிக்கை உண்டாகும்?" என்ற கேள்வி பிறக்கலாம். இறைவனைச் சரணடைய முக்கியமான காரணம் அவன் பெருமையை உணர்வது அன்று. நம் நிலையை உள்ளபடி உணர்ந்து, நமக்கு வரும் துன்பங்களையும் உணர்ந்தால் புகல் எங்கே என்று தேடும் முயற்சி உண்டாகும். தலையில் தீப்பிடித்தவன் தண்ணீர், தண்ணீர் என்று தவிப்பதுபோல இறைவன் அருளுக்காக ஏங்கும் நிலை உண்டாகும்.

தண்ணீரிலே மூழ்குகிறவன் ஒரு துரும்பையும் பற்றிக் கொள்வான் என்று சொல்வார்கள். அவன், துரும்பு நம்மைத் தாங்கும் என்ற அறிவோடு பற்றுவதில்லை. நாம் உயிரை இழந்துவிடுவது நிச்சயம் என்ற அச்சமே துரும்பைப் பற்றச் செய்கிறது. அப்போது, இது நம்மைப் பாதுகாக்குமா என்று யோசிப்பதில்லை. அதே மனநிலையில் ஒரு கட்டை தென்படுமானால் அதைப் பற்றிக் கொள்வான். தெப்பம் வந்தாலும் பற்றிக்கொண்டு கரையேறுவான்.

உலக வாழ்விலே உள்ள துன்பத்தையும், இனி வரப் போகும் மரணமாகிய பெரிய துன்பத்தையும் உணர்ந்தவனுக்கு, "எங்கே பற்றுக் கோடு?" என்ற ஆராய்ச்சி பிறக்கும். இறைவனை இறுகப் பற்றிக் கொள்ளும் உறுதி ஏற்படும். அப்போது இறைவன் அருள் செய்வான்.

நினைவுகள் நின்னினைவா, நித்திரைமெய்ந் நிட்டை,
வினையனைத்தும் பூசையென விதிபுரிநாள் மேவாதோ.

முருகன் தன்பால் சரணடைவார் யாரேனும் இருக்கிறார்களா என்று, அவர்களைக் காப்பாற்றுவதற்காக வழி பார்த்துக் காத்திருக்கிறான். திக்குகள் நான்கு. மேல், கீழ் என்பவற்றையும் சேர்த்தால் ஆறு ஆகும். ஒவ்வொரு திசையையும் நோக்கிக் கொண்டு ஆறுமுகங்களோடும் எழுந்தருளியிருக்கிறான் முருகன். அருளைச் சுமந்துகொண்டு இதைப் பெறுவார் யார் என்று எப்போதும் எவ்விடத்தும் காத்துக் கொண்டிருக்கிறான். 'எந்தப் பொருளும் நம் உயிருக்குப் பாதுகாப்பைத் தராது. எந்தப் பண்டமும் நம் உயிருக்கு இன்பத்தை அளிக்காது. முருகன் ஒருவனே நம்மைக் காப்பாற்றி அருள் வழங்குவான்' என்ற உறுதிப் பாட்டுடன், தன்னைச் சரணென்று அடைபவர்களுக்கு அருள்புரிய ஆறுமுகநாதன் சித்தமாக இருக்கிறான்.

இதையே கந்தர் அநுபூதியின் காப்புச் செய்யுளில் அருணகிரிநாதர் சொல்கிறார். 'உள்ளம் உருக வேண்டும். அதற்காக இந்த நூலைப் பாடுகிறேன்' என்றவர், 'யாரைப் பற்றிப் பாடப் போகிறீர்கள்?' என்ற வினாவுக்கு விடையாக, "தன்னைச் சரணாகதி என்று அடைந்தவர்களுக்கு அருள் செய்யும் சண்முகனைப்பற்றி" என்று சொல்கிறார்.

'நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக்கு."

அவன் ஆறுமுக முடையவன்; அருள் நிரம்பியவன். அவ்வருளைப் பெற வேண்டுமானால் தஞ்சமென்று அவனை அடையவேண்டும். அப்படித் தஞ்சம் புகுகின்றபோது அவன் அருள்வான். அதற்காகவே அவன் ஆறுமுகக் கோலத்துடன் எழுந்தருளி யிருக்கிறான். (தொடரும்.)

பேசா எழுத்ததனைப் பேசவைக்கும் பேரருளார்
ஆசானாய் வந்தெனக்கு அருள்புரிநாள் என்றேயோ.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A., B.T.)

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு அண்ணாமலை:

இத் திருத்தலத்தில் நம் அருணகிரிப் பெருந்தகையார் கரணவாதனை மாய்த்து மரணவாதனை மாற்றிய கருணை வார்த்தை உபதேசிக்கப் பட்டனர். இளம் பூரணன் அடியெடுத்துதவ இயல்கவி மேன்மைத் திருப்புகழ் பாடிப் பன்னாள் இங்கு இனிது வாழ்ந்திருந்தனர் என்பவைகளை முன்னரே கூறினோம். இத் தலத்திலிருந்த போது இவரது திருவாயினின்று வெளி வந்தவை கருப்புகல் தடுக்கும் திருப்புகழ்ப் பனுவல்களும், கந்தரலங்காரக் கட்டளைக் கவிகளிற் சிலவும், நாதன் சிறப்பு கூறும் வாத நூலெனப்படும் கந்தரந்தாதி முதலியனவும் ஆம். ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது பேசுவாம்.

திருப்புகழ்:

அறிவற்ற உலகமும், சிற்றறிவு, சின்னாள் வாழ்வு, பல் பிணி கூடிய உயிர்களும் அடையும் புகழ் அழிவது போலன்றி, என்றுமுள்ள அறிவுற்ற இன்பமயமான இறைவனது புகழ் அவனைப் போலவே என்றும் நின்று நிலவும் பெற்றியது. ஆதலின், அதனைத் திருப்புகழ் என்னலாம். சிறப்பாகத் திருப்புகழ் என்ற சொல் ஆறெழுத்தாலாகி, ஆறெழுத்தாண்டவனாகிய ஆறுமுகன் புகழையே குறிப்பதாயிற்று. பால் என்றால் பசும் பாலையும், பழம் என்றால் வாழைப் பழத்தையும், திருவாசகம் என்றால் மணிவாசகத்

காசினையே தேடிக் கருத்தழித லன்றியுனை
நேசமுடன் எண்ணி நெகிழ்வுறுநாள் நேராவோ

தையும் குறிப்பன போலத் திருப்புகழ் என்பது நமது அருணகிரிநாதர் அருளிய நூலையே குறிப்பதாகும்.

"காதலாய் ஒருமயிலில் கனிந்தேறும் தணிகைவரைக் கந்தன் [யார்க்கும்
நாதனே எனத்தெளிந்த அருணகிரி நாதனும் முன் நவின்ற [பாவை
ஓதுவார் திருப்புகழ் என்று உலகினுள்ளோர் அதற்கு [நிகருண்டோ மற்றைச்
சாதலார் விண்ணவர்கள் தம்புகழைத் திருப்புகழாய்ச் [சாற்றிடாரே"
(கந்தப்ப தேசிகர்)

இந் நூல் இயற்றமிழ்க் கிருப்பிடம்; இசைக்கலைப் பிறப்பிடம்; ஞான நூல்களின் நாயகம்; மோன நிலையின் தாயகம்; பாகதிக்கு ஏணி; மனத் தளர்ச்சிக்கு ஆணி; அருட் கடலுக்கு ஏற்றம்; பிறவிக்கு அரம்; ஆதலால்,

"திருப்புகழைக் கற்க; திருப்புகழைக் கேட்க;
திருப்புகழை நித்தம் செபிக்க — திருப்புகழை
அர்ச்சிக்க முத்தி எளிதாகுமே கூற்றை வென்று
கெர்ச்சிக்க லாமே கெட"

"கருப்புகழாம் பிறசமயக் கதைகேளாது அநுதினமும்
திருப்புகழைக் கற்பார்க்குச் சித்தியெட்டும் எளிதாமே"
"வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர்
சீலமேத்திய சித்தப்ர சித்தரே"

என்ற திருவாக்குகள் திருப்புகழின் சிறப்பையும், ஓதுவாருறு பயனையும் விளக்குகின்றன. இத்தகு சிறப்பின் அமைந்த திருப்புகழ்ப் பாக்களில், அருணைத் தலத்துக்கே அமைந்த பாடல்கள் சிலவற்றின் அரிய கருத்துக்களை ஆராய்வாம்.

அருணைத் திருப்புகழ்:

1

பொதுவாகத் திருப்புகழ் பலவற்றிலும், சிறப்பாக அருணைத் திருப்புகழிலும் பெண்கள் வருணனை, விலை மாதர்

கொஞ்சுகிளி வள்ளியொடு கோமகளார் கோவுனை
நெஞ்சில்வைத் தேத்தஅருள் நேரும்நாள் என்றேயோ.

கொலை பாதகச் செயல் முதலியன விதந்தோதப் பெறு வன. இதுபற்றிய கருத்து பலவகையாகச் சொல்லப்படுகிறது. மண், பெண், பொன் என்ற மூவாசைகளில் மண்ணாசைக்கும், பொன்னாசைக்கும் தாயகமாவது பெண்ணாசையே. இதுவே ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்களையும் பிணிப்பது. பெண்ணாசை கொண்டுவிட்ட ஒருவனுக்கு ஏனைய இரண்டும் இயல்பாகவே எழும். பெண்ணாசை ஒழிக்க மற்றவை மடியும். ஆதலின், அதனை ஒழிக்க அருணகிரியார், பல பாடலில் கூறுங் கடமை கொண்டார் என்க.

2

"அருணகிரியார் சண்முகத்தின் தண்முகம் சார்வதன் முன்னர் பலகால் பெண்முகங் காணும் பெற்றியரா யிருந்தார். அதனால் அல்லலும் பிணியும் அடைந்தபின் செவ்வேட் பரமன் திருவருளால் தெளிவடைந்தார். விலைமாதர் சிற்றின்பம் வேம்பென்று தம் ஆழ்ந்த அநுபவங் காட்டி அகிலத்தோரை எச்சரிக்கவே இதனைப் பல பாடல்களால் பகர்கின்றார்." இவ்வாறு மிருகத் தன்மை (Brutality), மனிதத்தன்மை (Humanity), தெய்வத் தன்மை (Divinity) என்று மூன்றாகக் கொண்டு, அருணகிரியார் முதலில் வெறும் மிருக உணர்ச்சியான (Animal passion) காமப் பித்திற் கலங்கி, நல்லோர் உறவால் மனிதப் பண்பு பெற்றுப் பின் இறையருள் உதவத் தெய்வீக நிலை எய்தினர் என்று கொள்பவராவர். இவர்கள் திருப்புகழ் கூறும் செய்திகளனைத்தையும் ஆசிரியரது சொந்த அநுபவங் கூறும் அகச் சான்றுகளாக (Interal evidence) ஏற்பவர்கள் ஆவர்.

3

வேறொரு கருத்துப்படி, திருப்புகழ்க் கூறுவன அனைத்தையும் அங்ஙனமே சுவாமிகள் அநுபவமாகக் கூறு

அன்பறியார், மெய்யடியர் ஆசியுறார் தமையகன்று,
இன்புறுநின் அருளுடையார் நட்பெனக்கும் ஈவாயோ.

தல் பொருந்தாது. ஏனெனில்,

"இல்லறத்தான் அல்லேன், இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்—சொல்லறத்துள்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றே நான் ஈடேறுவேன்"

என்ற திருவாக்குக் கொண்டு ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் இயற்கைத் துறவியும் ஞானியுமல்ல எனல் பொருந்துமா?

'ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை'

என்ற மணிவாசகத்தையும்,

'குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்
[குற்றமே பெரிதுடையேன்]

என்ற ஆளுடைய அரசுகள் திருவாக்கையும் கொண்டு மணிவாசகர், திருநாவரசுகள் என்பாரைக் குறைகுணத்தவராகக் கொள்ளல் பிழையன்றோ! உலகுய்ய அவதரித்த உத்தமர்கள் ஆதலின், இவர்கள் பிறர்பால் குற்றம் கண்டபோது அவையெல்லாம் தம்மிடம் இல்லையாயினும் உள்ளன போல நமக்காக முறையிட்டுத் திருத்த முயன்றனர். அதனாலன்றோ,

"அருங்கவி வாத வூரனே முதலோர் அன்பிலேன்
[என்பது பொய்ம்மை"

என்று துறைமங்கலத்தார் விளக்குகின்றார். மேலும் அருள்நிலையுற்றோர், அஃது அடையுமாறு பிறர்க்கு அறிவுறுத்தவும், தாம் பெற்ற நிலையால் பெருமிதங் கொண்டு வழுக்கி வீழாமலிருக்கவும் இங்ஙனம் பாடினர் என்பர்.

4

ஆசிரியர் வாழ்ந்த கால நிலை, மக்கள் மனநிலை, சமய நிலை, ஒழுக்க நிலை, சூழ்நிலை யறிந்து அந்தப் போக்கில் பாடல் பாடினர், உதாரணமாக, நமது திருப்புகழ் முனிவர் காலமாகிய 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்கள் நிலையை

ஏனோ நினதுள்ளம் இன்னும் இரங்கவிலை
நானோ நினையெண்ணி நைதல் உணர்ந்திலையோ.

உன்னுக. மக்களிற் பலர் செந்தமிழ் ஓதினர்; அது, நான்மணி மாலை, கோவை, உலா, மடல், மஞ்சரி முதலிய பலவகைப் பிரபந்தங்களால் தச்சனடித்த வாசல்தோறும் ஏறிச் செல்வரைப் பாடிப் பணம் பெற்றனர். அங்ஙனம் சிறிது சிறிதாகக் கூட்டிக் கொணர்ந்த பொருளை விலைமாதராய்த் தெருவுலாத்தித் திரிந்த தெரிவைமார்க்குச் சொரிந்து உடற்பிணிக்கும் வறுமைப் பிணிக்கும் உள்ளாயினர். இதனைக் கண்டு மனம் பொறுத நாவலர் பெருமான் அவர்களைத் திருத்தம் செய்யவே அதன் இழிவை இடித்துக் கூறலாயினர். நீதியை உரைக்கும் பஞ்சதந்திரம் போன்ற நூல்கள் அதனைப் பறவை விலங்கினங்கள் முதலிய பாத்திரங்கள் வாக்கிலே வைத்துக் கூறும். பறவை யினத்தைக் கூடக் குறைகூற விரும்பாத நம் பாவலர், அக்குறை யனைத்தையும் தங்குற்றமாகவே ஏற்றுக்கொண்டு பாடினர் என்க. ஆங்கில இலக்கிய உலகில் பெரும் பெயர் கொண்ட ஜான்சன் (Dr. Johnson) என்பார், பாராளுமன்ற நடவடிக்கைகளைப் புனைபெயரிட்ட பாத்திரங்கள் மூலமாகப் பத்திரிகையில் தெரிவித்த செய்தியும் ஈண்டு நினைக்கத் தக்கது. திருவண்ணாமலை பிரபுடதேவ மாராஜன் ஆட்சியிலிருந்தது. பிரபுடதேவன் விஜயநகர மன்னரின் பாளையக்காரர்களில் ஒருவன். விஜயநகர மன்னர்களில் சிறப்பாக கிருஷ்ணதேவராயர் போன்றவர்கள் ஒழுக்கம் குறைந்தவர்கள் என்பது வரலாறு படிக்கும் வாய்மை. மேலும் திருவண்ணாமலை, வல்லாள மகாராஜன் காலத்திலிருந்தே விலைமாதர் இருக்கையாக இருந்ததென்பது புராணச் சான்று. நோயாளி இருந்த அறையில் அவன் கண்ணில் படும்படி ஊறுகாய் வைத்தால், அதன் தீங்கை உணர்ந்தாலும், அதனைச் சுவைக்கவே அவன் விழைவு தூண்டப்படுமாறுபோல, ஒழுக்கம் உயர்வாக மதித்த உத்தமரும் விலைமாதர்கள் மலிந்து கிடக்கும் சூழ்நிலையில் தம் நிலையில் வழுக்கி வீழ்தல்

உன்னிடத்தில் உள்ளுணர்வு ஊன்றல் உணர்ந்துள நீ
என்னிடத்தில் வாவென் றெனையேற்றுக் கொள்ளுதியோ.

இயற்கை. அத்தகைய கோரக் காட்சிகளைக் கண்ட அருண கிரியார் உளம் பதைத்து, அவர்களைக் கருணையால் திருத்த வேண்டியே இல்லாக் குறைகளை எல்லாம் தமது சொந்த அநுபவம்போல் ஏற்று, மாசறுக்கும் மயிலிறை வன் திருமுன் வலியுறுத்தி அருள் வேண்டினர். அத்தகைய பிரார்த்தனைகளே திருப்புகழாகும்.

இனி, பிறர் கூறும்வண்ணம் திருப்புகழில் கூறிய அனைத்தும் அருணகிரியின் அநுபவமே என்போம். அப்படியானல் அவர், 'எனை யடைந்த குட்டம்' என்ற பாடலில் தமக்குத் தொழுநோய் வந்ததென்கிறார். அந்தப் பாடலை நாம் படிப்பதால் பயனுண்டாகுமா? நோயில்லாத ஒருவன் அதனைப் படித்தால் ஒருக்கால் அதில் கூறிய நோயும் வரக்கூடும் அல்லவா? அதற்காக அப்பாடலை ஒதுக்குவதா? சிந்தியுங்கள். இப்படித் தமது சொந்த அநுபவமாக அடைந்த நோயின் தன்மையைப் பாடிய பாடல்கள் பல, தனிப் பாடல் திரட்டில் உள்ளனவே! அவற்றை எல்லாம் நாம் பாராயணம் செய்கிறோமா? இக் கேள்விகட்கு எல்லாம் ஒரே விடைதான் உண்டு. திருப் புகழ் ஆசிரியர் கூறுவன அனைத்தையும் அவரது சொந்த அநுபவமாகக் கொள்ளலாகாது. அவை பிறர் துயர் கண்டு திருத்த எழுந்த பிரார்த்தனைகள்; அவையனைத் தும் இறையருள் வேண்டும் இன்கவிகள். படிப்பார் மனப் பிணி, பவப்பிணி மாற்றும் சஞ்சீவியாயுள்ள மந்திர மறை என்னல் பொருந்தும்.

இங்ஙனம், மேலே கூறியவை அனைத்தும் பல வேறு பட்டார் கூறும் கருத்துக்களாம். இவற்றில் ஏற்கத் தக்கது இதுவெனக் கொள்ளும் உரிமையை வாசகர்களுக்கே விடு கின்றேன். அருணைத் திருப்புகழ் அள்ளி வீசும் அரிய கருத்துக்களை அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்.)

தாய்தந்தை தாரமெலாம் தம்பந்தம் செய்துளரால்
சாய்த்தந்த பந்தம்நீ சம்பந்தம் செய்யாயோ.

நாணமும் நகையும்—2.

(அன்பன்)

பூணார மார்பனைப் புள்ளூரும் பொன்மலையைக்
காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே.

ஆம். கண்ணனைக் காணும் கண்களே கண்கள்; மற்றவற்றைக் காணும் கண்கள், முகத்தில் இருக்கும் இரண்டு புண்கள். அவ்வளவுதான். திருப்பணிக்கே தம்மை அர்ப்பணித்த அடியவர்க்கு, இன்ப மயமாகி இருக்கின்றவன் எம்மான். அந்தப் பரமனுடைய வைபவங்களைச் சிரவணிக்கும் செவிகள்தான் செவிகள். மற்றவற்றைக் கேட்கும் காதுகள், இரு வரட்டுத் தொளைகள்.

தோளா மணியைத் தொண்டர்க்கு இனியானைக்
கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே.

என்று அறுதியிடுகிறது இதயம்.

பெருமாள் விஷயமாகப் பேசுவதே பேச்சு; மற்றவை வெறுங் கூச்சல்; பகவானைப் பாடுவதே பாடல்; பிற பாடல் எல்லாம் வெறும் ஊடல்கள்; ஒப்பாரிகள். ஆமாம்.

வாயானை மாலை வணங்கி அவன் பெருமை
பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கண்டாமே.

மேலும் கேளுங்கள்!

தோடார் நறுந்துழாய் மார்வனை ஆர்வத்தால்
பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே.

பேஷ் பேஷ்!

சங்கேந்தும்
கையானைக் கைதொழார் கையல்ல கண்டாமே.

கைகள் அல்லவா? ஆம். அவைகள் பலகைகள்; அலகைகள்.

அருளறியேன் வாழ்க்கை அமைதி தனையறியேன்
இருளறியாத் தீபத்தால் எனைக்காட்டி யருளுதியோ.

நித்ய கல்யாணனை நினையாத நெஞ்சம், வஞ்ச மனம்; அது நஞ்சு நிலம்.

நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல கண்டாமே.

அறிவு இருக்கலாம்; அதனால் அவர்கள் ஆயிரம் சாதித்திருக்கலாம். என்ன பயன்?

நெடியானைச் சிந்தித்து
அறியாதார், என்றும் அறியாதார் கண்டாமே!

மாதவற்கு ஆளாகாதவரை மானிடவர் எனலாமோ? கூடவே கூடாது. சரி சரி. உள்ளத்தைக் குறித்தும் ஆழ்வார் ஓதுவது கோடி பெறும்.

கள்ளார் துழாயும் கணஅலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலும்முன் கண்டக்கால்
புள்ளாய் ஓர் ஏனமுமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக் [கென்று
உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே.

(பொ-ரை:)—தேன்நிறை துளசியும், தொகுதியான அலரியும், வில்வமும், தண்டில் முள் நிறைந்த தாமரையும், ஆம்பலும் முதலிய மலர்களைக் கண்டதும், (மறைகளையருள) அன்னமாகியும், நீரில் அழுந்திய நிலத்தை மேல் கொணர, ஒப்பற்ற பன்றியுமான திருமாலின் திருவடிகட்கு (அர்ச்சிக்க) உதவும் என்று, ஊன்றி எண்ணுதார் உள்ளத்தை உள்ளமாகக் கருதோம், (எ-று).

உள்ளமென்று கொள்ளோம் எனவே, கர்மத்தில் கால் ஆழும் கள்ளமென்று கருதுவம் என்று, தெளிவொடு பாடுகின்றார் திருமங்கை யாழ்வார்.

இப்பாசுரத்தின் உரையில் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை குறித்த ஒரு இதிகாசம் கோடி பெறும்.

விலை கூறி மலர்களை விற்கின்றார்கள். காலையில் பெருங் கூட்டம். மாலையிலோ சொல்லத் தேவையில்லை. அந்திப் பொழுது வந்தது. எல்லாம் விலையாய் விட்டன. இரவு மணி ஏழு. அவரவர் தம்தம் கடைகளை மூடுகின்ற நேரம்.

நாயேன் இந் நாள்வரையும் நல்லருளன் தாள்போற்றி
சேயாகி வாய்திறக்கும் செய்தி யறிந்திலேயோ.

பிரபுக்களின் பிள்ளைகள் சிலர், திடீரென்று வந்தனர். சண்பக மலர் கிடைக்குமா? என்று எவரையும் வினவினர். எம்மலரும் இல்லை. எல்லாம் விலை போயின என்றார்கள் வியாபாரிகள்.

ஒரு கடையில், உதிரியான சண்பகப்பூ ஒன்றே ஒன்று இருந்தது. அதைக் கண்ட ஒருவன், ஐயா! அதைக் கொடுக்க முடியுமா? என்றான்.

அதுவா! எடுத்துக் கொள்ளுங்கள் என்றான் வர்த்தகன். அதைக் கண்ட மற்றொரு பிரபுவின் மைந்தன், அது என்ன விலை? என்றான்.

அடடா! இலவசமாக அல்லவா எடுத்துக் கொள்ளச் சொன்னேன். இதுவும் விலை போகிறதா. சரி சரி! சரியான பேர்வழிகள் என்று ஏதோ ஒரு முடிவிற்கு வந்த வர்த்தகன், ஒரு அணா என்றான்.

நான் நாலணாத் தருகிறேன் என்றான் மற்றொருவன். ஒரு ரூபாய்! பத்து ரூபாய்! நூறு ரூபாய்! ஆயிரம்! வளர்ந்து இப்படிப் போட்டி வலுத்தது.

அதிர்ஷ்டம் இப்படி அல்லவா தேடி வர வேண்டும் என்று மகிழ்கின்றான் வர்த்தகன்.

மற்றவர் முகம் வாடியது. ஆயிரம் கொடுத்து வாங்கியவன், மிடுக்கு நடை நடந்தான்.

ஸ்ரீ ஜகந்நாதர் சந்நிதியுள் நுழைந்தான். அம்மலரை ஆண்டவன் திருமுடிமேல் வைக்கும்படி அர்ச்சகரிடம் சொன்னான். இதழ் இரண்டொன்று உதிர்ந்து கிடந்த அந்த ஒரு மலர், ஆயிரம் ரூபாய் மதிப்புடையது அல்லவா! அர்த்த யாம பூஜா காலம்வரை, பெரும் பக்தர் யாவரும், கூடிக்கூடி இது குறித்தே பேசினர்.

இரவு மணி இரண்டு. பிரபு பெற்ற பிள்ளை, உல்லாசமாக மலரணையில் உறங்குகின்றான். பெருமான் ஸ்ரீ ஜகந்நாதன், அவன் கனவில் பிரசன்னம் ஆயினன்.

கதியார் தரஅருளும் கருணைமலை நின்னையெணி
மதியார் தரஅருடி மயிலமலை மன்னவனே

ஏடா! எவ்வளவு செருக்கு உனக்கு? வீதியில் வீச இருந்த ஒரு மலர்க்கு ஒரு ஆயிரம்! அட பித்தே! நாணை வைத்தோம் போட்டியிட்டாரை என்று நகைத்தாய்! பெரும் பக்தன் என்று, ஆலயத்தில் உன்னை அறியாதார் பேசுகின்றனர்.

சேவிக்க வந்தவரும், உன்னால் என்னைச் சேவிக்கவில்லை தெரியுமா? ஒரு மலர் ஒரு ஆயிரம்; ஆயிரம் ரூபாய் ஒரு பூ என்று, நீ வாங்கி அளித்த மலரின் மதிப்பே அவர்தம் மனத்தில் இருந்தது. கண்டவர்தம் நினைவும் மொழியும் ஏறியேறிக் கனத்ததடா பாரம்! தக்கவர்க்கு உதவி அவர்தம் இதய தாபத்தைத் தணிக்காமல், என் தலையில் இப்படிப் பாரத்தை ஏற்றுவதோ தருமம்? உன் போன்ற மன நினைவையுடையவர்கள், என்னை வழிபடாமல் சற்று ஒதுங்கியிருந்தால் போதும்! எனக்கும் லாபம்! அன்பர்க்கும் அமைதி! என்று உறுத்து ஜகந்நாதர் உரைத்தார்.

கனவு கலைந்தது. கதறினன் பிரபு மகன். தெளிவு கொண்டு பிறகு அவன் தேறியிருக்கலாம். இப்படியும் ஒரு கதை இருக்கிறது. இதுவா பக்தி? அட பாவமே!

இக்கதையை எண்ணி, கள்ளார் துழாயும் என்ற பாசுரத்தைப் பாடுகின்றார் ஆழ்வார் என்று பேசுகின்றார் பெரியவாச்சான் பிள்ளை.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அங்கு அதுகண்டு அருள்செயா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறையீசனை
நண்ணாறியாமல் நழுவுகின்றாரே'

என்று அறிவிக்கிறார் அப்பர் ஸ்வாமிகள். ஆரவாரம் வேண்டா; வழிபாட்டில் மற்றவர் மதிக்கும் ஆடம்பரமோ, வேண்டவே வேண்டா. பக்தசிகாமணிகளான இவர்கள் தம் அறிவிப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல், எவையும் பெருமானுக்கு உரியன என்று உணராமல், வில்வ மரம் பெருமாள் கோயிலில் வேண்டாம். இருந்தால் வெட்டி விடும் என்கின்றனர் ஒரு சாரார்.

எப்பாலும் நின்னடியர் ஏத்துகின்றார்; கண்டடியேன்
அப்பா! உனை உன்னும் அன்புநெறி ஆர்ந்ததுவே.

'கள்ளார் துழாயும் என்ற' பாடலின் மூன்றும் அடிக்கு, பிரமனுகிய அன்னமும் திருமாலாகிய பன்றியும் தேடநின்ற சிவனார்க்கே எம்மலரும் என்று பொருள் கொண்டு, மொழி மொறுக்கின்றனர் ஒரு சாரார். பழையோர் கருத்தைப் பாராமல், பார்த்துப் பயிலாமல், மனம் போனவாறு மாறு படும் இவர்களைக் கண்டு, நாணம் கொண்டு நில மகள் நகை புரியமாட்டாளோ?

அன்பின் சக்தி

(ஆ. கி. ரங்கராஜன்.)

சகல ஜீவராசிகளும் வாழ்வது அன்பினுலேயே யாம். அன்பு இல்லையேல் அவனி வாழாது. அன்பின் சக்தியே அகிலத்தை ஆள்கிறது. ஆனந்தத்தை அளிக்கிறது. அநீதியை அழிக்கிறது.

அநீதியை அன்பு அழிக்குமா? அழிக்க இயலுமா? அன்பு என்பது எப்போதும் தளர்ந்து விட்டுக்கொடுப்பதா யிற்றே? எப்போது அன்பு அநீதியை வென்றது? இக் கேள்விகளுக்கு இதோ ஒரு ஆதாரம்.

அரக்கர்கோன் இலங்கை மன்னனுகிய தசமுகனை வீழ்த்தியது அன்பின் சக்தியே யாம். இராவணன் சர்வ லோக சக்கரவர்த்தியாய் அரசாண்டான். அவனது ஆக்ஷி யில் அறக்கடவுள் அடிமைப்பட்டுக் கிடந்தது.

சிலர் கூறுவர். இலங்கேசன் மகாதர்மிஷ்டன். பெரும் பக்தன். அவனது ஆக்ஷிக்காலத்தில் இலங்கை சுபிக்ஷமாய் இருந்தது என்று. ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அவன் அனுஷ்டித்த தர்மம் ஒரு தலைப் பக்ஷம். தன் நாட்டு மக்கள் வாழ, தான் வாழமட்டுமே தர்மத்தைப்

வாரமுள அன்பரெலாம் வாழ்த்தி வணங்குகின்றார்
ஈரமிலா என்னையந்த இன்பவழி யேற்றுதியோ.

பயன் படுத்திக் கொண்டான். சதுர்முகன் முதல் சகல தேவரும் அவனது பெயரை நினைக்கவும் அஞ்சினர். அஷ்டதிக் பாலகரையும் இதர அமரர்களையும் அடிமை கொண்டு தனது ஆணைக்குட் படுத்தினன் அசுர வேந்தன்.

அவனைச் சார்ந்த அவனது உறவினரும் வீரரும் அளவு கடந்தவராவர். அவர்களோ பயங்கர மாயாவிகளாம். அவனது ஸாம்ராஜ்யம் தற்காலத்தில் 'ஆஸ்திரேலியாக் கண்டம்' என்று அழைக்கப்படும் பிரதேசம் வரை வியாபித்திருந்தது.

அக்கொடியோன் தனது விருப்பத்திற்கு உட்படாத மங்கையரையும் மாந்தரையும் சிறையிலிட்டு சித்ரவதைக்குட்படுத்தினன். அவனிடம் சிக்கிய அரிவையர் கற்புடன் திரும்புதல் அரிது. அகாதையையே தனது அணிகலனாகக் கொண்ட அவன் அரனைப் பூஜித்ததன் விளைவாய், அபார வலிமையையும் அழியாத ஆயுதங்களையும் அபாயகரமான சக்திகளையும் அடைந்தான். அவற்றைப் பரீக்ஷிக்கவும் அவற்றால் அகில சராசரங்களை அடக்கவும் எண்ணித் திக்விஜயத்திற்குப் புறப்பட்டனன்.

எண்டிசைகளைத் தாங்கும் களிறுகள் எட்டும் ஒருங்கே கூடி இலங்கேசனை முட்டித் தாக்கின. வர மகிமையால் வாழும் இராவணன் மார்பில் யானைகளின் மருப்புகள் பதினாறும் சிக்கிக் கொண்டன. அயர்ச்சியே சிறிதும் அற்ற அசுரன் அக் களிறுகளை முன்னும் பின்னுமாக ஆட்டி அலைக்கழித்தனன். அல்லல் ஆற்றாது அலறிய களிறுகளின் குரலைக் கேட்ட அயன் அங்குத் தோன்றி அந்த யானைகளை விடுவிக்குமாறு வேண்டிக் கொள்ள, அரக்கன் பின்பு ஓர் வாளினால் தன் மார்பில் புதைந்த தந்தங்களைத் துணித்து, களிறுகளை விடுவித்து, மயனைக் கொண்டு அத்

செய்யாத தீமையெலாம் செய்துழப்பார் நட்பகன்று
ஐயா நினையுணர அடிமைக் கருளுதியோ.

தந்தங்களைச் செப்பனிட்டு, நவரத்னங்களை இழைக்கச் செய்து அழகுபடுத்திக் கொண்டான்.

குபேரனை வென்று அவனது புஷ்பகத்தைக் கைப் பற்றி, அதில் அமர்ந்து சென்று, கயிலாய மலை அவனுக்குத் தடையாக இருந்தமையால் சீற்றம் கொண்டு மலையை அகற்ற முயன்றான். எரிநேத்ரனின் லீலையால் அவனது சிரங்களும் கரங்களும் சிக்கிக் கொள்ள, ஆயுள் பலத்தால் ஆவி பிரியாமல் ஆண்டுகள் பலவாகத் துடித்தான். நாரத முனிவரின் யோசனைப்படி ஒரு சிரத்தையும் கரத்தையும் ஒடித்து வீணையாக்கி, நரம்புகளைத் தந்திகளாக்கி சாமகானம் பொழிந்து, கயிலாய பர்வதத்தைக் கரைந்தோடச் செய்து தன்னை விடுவித்துக் கொண்டனன். சாமகானத்தில் மகிழ்ந்த சங்கரன், அரக்கனுக்கு மேலும் நீடித்த ஆயுளும், பகைவரை வீழ்த்தும் வாளாயுதமும் வழங்கி வாழ்த்தி அனுப்பினன்.

நீலகண்டன் வழங்கிய வாளாயுதத்தை தசமுகன் எந்தச் சமயத்திலும் அனாவசியமாகப் பயன்படுத்திலன். காரணம் அவன் எல்லையற்ற வலிமையைப் பெற்றிருந்தமையே. எப்போதேனும் தோல்வி நேருமெனத் தோன்றும் சந்தர்ப்பத்தில் அவன் அவ்வாயுதத்தைப் பிரயோகிப்பதுண்டு. திரிமூர்த்திகளில் ஒருவனும், சர்வ சம்ஹார பிரளய நடனம் புரிபவனுமாகிய ருத்ரனின் வாளைப் பெற்ற இலங்கேசனைக் கண்டு அமரர்கள் அனைவரும் அஞ்சி அடி பணிந்தனர்.

எந்தச் சமயத்திலேனும் அவன் தன் உறையினின்றும் அவ்வாளை உருவுவானாயின், அதில் தோன்றும் ஒளியே அவனது பகைவரின் ஆற்றலைக் கவர்ந்துவிடும். அவ்வாள் அவனது கரத்தினின்றும் வெளிப்படுமாயின் பகைவர் எவராயினும் சம்ஹரித்துவிட்டே மீளும் தன்மையது.

தண்மையிலன் பேதமையால் தண்ணருள்சீர் எண்ணும்
ஒண்மையிலன் என்னையருள்! ஊதிமலை வேலோனே

இத்தகைய வலிமை எய்திய இராவணன் தனக்கு எதிரிகள் எவரும் இல்லை என்ற அகந்தையினால், தான் இச்சை கொண்ட காரியம் எதையும், இது நீதி, இது அநீதி என எண்ணிப் பாராமல் செய்ய முற்பட்டான். எவரையும் அன்பு கொண்டு ஆதரித்தல் அவனது அரசாக்ஷியில் இல்லை. அதனாலேயே அன்பு என்பதைத் தன் கருவியாகக் கொண்ட அறக் கடவுள் அவனது நாட்டை விட்டு அகன்றது.

தங்கையாம் சூர்ப்பணகையின் சொல்கேட்டு, மைதிலியின் எழிலில் மையலுற்று, கபடமாக மாரீசனை ஏவி, இராமனிடமிருந்து அவளைப் பிரித்துக் கவர்ந்து அசோக வனத்தில் சிறையிட்டனன் அரக்கர்கோன். வழியில் எதிர்த்த ஜடாயுவை சங்கரன் அளித்த வாளால் தாக்கி இறகை ஒடித்துத் தள்ளினன்.

அசோக வனமானது துன்பத்திலும், துயரத்திலும் ஆற்றாத எவரையும் ஆனந்தத்தில் திகழ வைக்கும்படியான தோர் சோலையாகும். அவ்வப்போது இலங்கேசன் அந்த சோலைக்கு வந்து இளைப்பாறுவன். எழில்மிக்க செடிகொடிகளும், மணமிக்க மலர்களும், இன்பமாய்ப் பேசிப் பாடும் பறவைகளும், தீஞ்சுவைக் கனிகளும் அங்கு பிரவேசிப்பவரை ஆகர்ஷிக்கும். அதன் உதவியினால்தான் இராவணன் தனக்கு உட்படாத எவரையும் அவ்வனத்தில் சிறைப்படுத்தி வைத்துத் தன் வழிப்படுத்திக் கொள்வன்.

அன்பின் சக்தியை அறியாத அரக்கன், சீதையை, கணவன்பால் அபார அன்பு கொண்ட நாயகியை, அவளது அன்பனும் அச்சுதனிடமிருந்து பிரித்தான். அணுவைப் பிளத்தலால் விளையும் அபாயசக்தி போன்று, அன்பர்களைப் பிரித்துத் தனக்கு ஆபத்தைத் தேடிக் கொண்டனன். அசோக வனத்தில் அவள் சிறைப்பட்டா ளாயினும், தன்

துன்புதரும் லௌகீகத் தொல்லை பலகழற்றி
அன்புதரும் சன்மார்க்கம் அயிலோய் அருளுதியோ

நாயகன்பால் கொண்ட அன்பின் பிணைப்பு அவளது திட சித்தத்தை மேலும் உறுதிப்படுத்தியது. அரக்கனை வீழ்த்தும் அக்னியாக உருவெடுத்தது. அதைக் கண்ட அரக்கன் அதிசயித்தான். ஆனால் அறிய முடியவில்லை.

இராகவன் தன்னைக் கொல்லவே தோன்றியுள்ளான் என்பதை முன்கூட்டியே உணர்ந்திருந்த இலங்கேசன், அவனை வலிமையில் இழுத்துக் கொன்றுவிட எண்ணினன்.

தசாத குமாரனுகிய இராகவன் இறைவனின் அவதாரம் எனினும், மானிட தர்மப்படி தாயின் கர்ப்பத்தில் தோன்றி வந்தபடியால், தனது உண்மையான பராக்கிரமத்தை அறிய அவனால் முடியவில்லை. ஆனால் அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்ட அவன், இளம்பிராயத்திலிருந்தே மாந்தரின் ஆசிகளையும் ஆதரவையும் அன்பையும் அடையப் பெற்றான். எவர்க்கும் உதவுவதே தன் கடமையாகக் கொண்ட இராகவன், கைகேயியின் கபட மொழிகளையும் அன்பு மொழியாகவே பாவித்துக் கானகத்தில் பிரவேசித்தான். குகனை "சகோதா!" என அழைத்தான். அதாவது மிக மிக எளியோரையும் தனது அன்பினால் பிணைத்தான். மாபெரும் முனிவர்களின் அனுக்ரஹம் பெற்றான். பல வருடங்களாய் சாதுக்களை அணுகி அவர்களின் ஸகவாஸத்தினால் உன்னதமானதோர் நிலையை எய்தினன்.

வைதேகியைப் பிரிந்த காகுஸ்தன் வானரப் படைகளின் உதவி கொண்டு இலங்கையுள் பிரவேசித்தான். போர் மூண்டது. இராமன் அரக்கரை நாசப்படுத்தத் தொடங்கியவுடன் தசமுகன் குறுக்கிட்டான். சகல புவனங்களும் நடுங்க இராம-இராவண யுத்தம் நிகழ்ந்தது. இராமனது அஸ்திரங்கள் அனைத்தும் அழிந்தன. அவ்வாறே இராவணனின் பராக்கிரமமும், வில், ரதம் முதலி

தீரமிலேன் உள்ளத் தெளிவுமிலேன் விராலிமலை
நாரகத்தாய் நன்ஞானம் நல்குதியோ நல்காயோ

யனவும் தொலைந்தன: இறுதியாக உள்ளது சங்கரன் கொடுத்த வாளாயுதம் மட்டுமேயாம். இராவணன் அதையே நம்பினன். அதனாலேயே அழிவற்ற அச்சுதனை அழித்து விடக் கருதியிருந்தான். அவன் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வாய்த்தது.

எல்லா ஆயுதங்களையும் இழந்த இராவணன் திகைப் புற்று, பின் வாளாயுதத்தின் நினைவுவர, உடனே அந்த ஆயு தத்தினால் வெற்றிகொள்ள எண்ணித்தன் உறையில் கையை வைத்தான். கடும் சினம் மூண்டுவிட்ட அக்கொடியவன், உறையை விட்டு சங்கரன் கொடுத்த வாளாயுதத்தை வெளியே எடுத்தபோது, அதனில் ஜொலித்ததோர் பெரும் ஒளியைக் கண்ட இராகவன் திடுக்குற்று அஞ்சி, "ஹா! இன்று அழிந்தேன்!" என அலறி உடல் சோர்ந்தனன். கோதண்டம் கரம் நழுவியது. திரிபுரமெரித்த விரிசடை யோனின் ஆயுதத்தைத் தடுக்க நிலவுலகில் யாரே உளர்?

ஆனால் மானிடப் பிறவி எடுத்த இறைவன் தனது வலிமையை உணராமற் போயினும், அன்பின் சக்தி அவனைக் காத்தது.

அசுர சக்தியை அன்பின் சக்தி எதிர்த்தது. அரனது ஆயுதம் அசுரனிடம் இருப்பினும் அன்பின் சக்தியின் முன் எம்மாத்திரம் அது? அத்தகைய சக்திதான் யாது? ஸாதுக் களிடம் பழகிய நற்பயனும், முனிவர்களின் அனுக்ரஹமும், மாந்தர்களிடம் இராமன் அனுஷ்டித்த அன்பின் பயனும் ஒருங்கே திரண்டு எழுந்ததோர் சக்தியேயாம்.

இராகவன் "ஹா!" என அலறிய வேளையில் அவனது சரீரத்தினின்று அந்த சக்தி ஜோதி வடிவமாய் வெளிப் பட்டு, இராவணனின் கரத்தினின்று விடுபட்டு வரும் சங்கரனின் வாளாயுதத்தைப் பஸ்மீகரமாக்கியது. வானவர் மலர் மாரி பொழிந்தனர். இராவணன் சித்தம் சோர்ந்தான். செய்வதறியாது திகைப்புற்றான்.

பெண்மையினும் பீடழிந்து நின்னருள்சீர் பேசுகிலேன்
உண்மையுள ஓம்பொருளை உள்உணர்த்த வாராயோ

தனக்கு நேர்ந்த விபத்தை இராகவன் உடனே மறந்து இராவணன் மீது கருணை கூர்ந்து, "இலங்கேச! இன்றைய போர் இத்துடன் முடியட்டும்! நாளை ஆயுதங்களுடன் வருக! யுத்தம் புரிவோம்!" என்று கூறினன். இராவணன் எதுவும் செய்ய வகையின்றி அரண்மனை சேர்ந்தான்.

மேற்கண்ட செய்தியைக் கம்பன் எவ்வளவு அழகாக நமக்கு எடுத்துரைக்கிறான்!

வாரணம் பொருத மார்பும்
வலிய குன்றெடுத்த தோளும்
நாரத முனிவர்க் கன்று
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்திற் போட்டு
வெறுங்கையோ டிலங்கை புக்கான்.

அரக்கர்கோன் அமைச்சர்களின் துர்ப்போதனையால் தனது உற்றார்உறவினர் முதலியோரையும், மூல பல சைன்யத்தையும், கரைகாணாத கருணைக் கடலான காகுஸ்தனின் கணைக்கு இரையாகச் செய்தனன். அன்பின் சக்தி அசுர சக்தியை வென்றது. தசமுகனின் தலைகளைத் துணித்தது. அன்பின் வடிவமான அன்னை ஜானகியை அச்சுதனிடம் சேர்ப்பித்தது. அவனியில் அற நெறியை நிலைநாட்டியது. மாந்தர் மகிழ்ந்தனர். அமரர் ஆநந்தித்தனர். இறைவன் ஸ்ரீ ராமன் அன்புக்குடையின் கீழ் அகிலம் வாழ அயோத்தியில் மகுடம் சூடினன்.

ஓங்குக அன்பின் சக்தி!

வண்மை வழியடியார் வந்துன்தாள் சார்கின்றார்
ஒண்மை யிலன்யான் ஒதியமரம் ஆவதுவோ

"ஆணலார், பெண்ணார்"

(வா, ராமலிங்கம் பிள்ளை)

மக்களுள் ஆண்மையுடையார் யார்? ஆண்மை என்பது என்ன? சிறிது சிந்திப்போம். ஆண்மை என்பது வீரதீரம் என்பதாகக் கொண்டு போரில் மல்ல யுத்தத்தில் புரண்டு படாமல் முனைந்து எழுவோர் ஆண்மையே ஆண்மையுடைமை என்பர் சிலர். மற்றும் அவையஞ்சாத் தன்மையில் மேடைமீது ஏறி தன் கருத்தைத் தீரத்துடன் தெரிவிப்பவனே ஆண்மையுடையவன் என்பர் சிலர். பின்னும் சிலர் பெண்களின் பிதற்றலுரைகளில் மயங்காத பெருமிதத்தால் தன்னிலை தளராதவனே ஆண்மையுடையவன் என்பர். இவற்றிற் காதாரமான முதுமொழிகளும் நிலவுகின்றன. அவை "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்"; "உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன், செறினுஞ் சீர்குன்ற லிலர்" என்ற குறள்களால் வீரனின் மனத்திட்பமும்; "பகையகத்துச் சாவார் எளியர் அரியர் அவையகத் தஞ்சா தவர்" எனவும், "ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர் எனவும், "கற்றாருள் கற்றார் எனப்படுவார் கற்றார்முன், கற்ற செலச் சொல்லுவார்." எனவும் குறிக்கப்படுவனவற்றால் அவையஞ்சாமையின் மேன்மை தெளிவுபடும். "பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப் பெண்ணே பெருமை யுடைத்து" "வன்புலால் வேறுமஞ்சேன், வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்" என்பனவற்றால் பெண்பாலரை நயவாத பெருமையும் இனிதுரைக்கப் பட்டன.

இவை மூன்று நிலையினருக்கும் வாழ்க்கையின் இறுதியில் இறப்பு உண்டாவது இயல்பே யாகலான், இவற்றை விட்டு இறவாமையும், மீண்டு பிறவாமையும் எய்தப் பெறும் நிலையில் உலைவின்றி முயன்று நின்றாரையே ஆண்மையுடை

அண்மைவந் தருள்புரிவை என்கின்றார் அன்புடையர்
தண்மையுயர் வாழ்வு தழுவுமுறை தாராயோ.

யோர் என ஆன்றோர் கொண்டனர். அம்முயற்சியில் பொருந்தாதவரைக் காணவே அஞ்சுவதாக அவர்கள் கூறியருளினர்.

"கோணிலா வாளியஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியினானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே"

என்பதால், ஈடேற்றம் தரும் இறைவனை இறைஞ்சியணியாதாரே ஆணலார் என்பதும், மற்று அன்னரே பெண்ணர் என்பதை,

"விண்ணவர் மகுடகோடி மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணலம் பலவின் கொற்ற அரையனுக் காசையில்லாழ்
தெண்ணரைத் தெருளாவுள்ளத் திருளரைத் திட்டைமுட்டைப்
பெண்ணரைக் காணு கண்வாய் பேசாதப் பேய்களோடே"

என்ற திருவிசைப்பாவினால் தில்லைக்கூத்தன் திருவடி போற்றும் பண்பிலாரே பெண்ணர் எனவும், அவரைக் கண்ணால் காண்பதும், அவரோடு உரையாடலும் ஆகா எனப் பரிவாற் கூறிப் போந்தமை புலனும்.

முருகனடியார்-14.

சுப்ரமண்ய ஸ்வாமிகள்
(ரசபதி)

மெய்ம்மை நிலை

பொழில் வளம், புலவர் போற்றும் புகழ் வளம், அலைகள் ஒலிக்கும் கடல் வளம், வேதம் ஓதும் வியன் வளம் திகழ்ந்து நிறைந்தது திருச்செந்தூர்.

ஆலயத்துள் தொண்டு செய்யும் அந்தணர்கள் பலர். அவர்களுள் ஒருவர் சுப்ரமண்ய ஸ்வாமிகள். அவர்க்கு உறவினர் அளவிலர். எனினும், எவரிடத்தும் பற்று அவர்க்கு இல்லை.

உம்பர்க் கரிதான உன்பதத்தைச் சேவித்து
வம்பர் சபையகலும் வாழ்வை யருளுதியே.

'தோன்றும்; தொடர்பு கொள்ளும்; தூரம் போம்; மறைந்து விடும்; இதுதானே உலகம்! ஒவ்வொரு குலத்திலும் பிறப்போம். அப்போது அக்குலத்தில் உறவு. இறந்த பின் மற்றொரு குலத்தில் தோற்றம். முன்னைய உறவு முடிந்தது. பின்னைய உறவு பின்னு கின்றது. 'என்ன மாயம்!

குறுகிய மனநிலையில் குலாபிமானம்; பந்துக்களில் அழுத்தம் பந்தப் படலம். தெய்வமே! முருகா! இந்தத் தெளிவு என்றும் இருக்க அருள்க ஐயா! அருள்க அறுமுகா' என்று அகமுருகி வேண்டுவார்: எவரையும் இறை சொருபமாக எண்ணுவார். புனித தன் மனநிலையை, அவர் எவர்க்கும் புலப்படுத்துவது இல்லை.

உலக இச்சையை உவர்த்த அவருடைய அகத்தும் புறத்தும் ஆறெழுத்து ஒலித்தது. அடுத்து அடுத்துத் தியானத்தில் ஆழ்ந்து விடுவார். அந்நிலையை மட்டும் எவரும் அறிந்துளர்.

அகதி நிலை

மியாவ்! மியாவ்! மியாவ்! என்ன இது? ஆம். குறுகுறு பார்வை. குளுமை உடல். ஒட்டிய வயிறு. ஓடி வந்தது ஒரு பூனைக்குட்டி.

என்ன அதிசயம்! எங்கே போனாலும் அவர் காலைச் சுற்றி வருகிறதே! அவர்க்கு இது புது அனுபவம்.

மியாவ்! மியாவ்! 'எனக்குத் தாய் இல்லை; இல்லாது போனால் தான் என்ன? எவர்க்கும் தாய் இறைவன். அவனை வழிபடும் நீர் தான் இன்று முதல் எனக்குத் தாய்' என்பதுபோல் இருக்கிறது அதன் குரல்.

எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் அவர்க்கு, இதைக் கண்டு பெரிதும் இரக்கம் பிறந்தது. கலுழ்ந்தது கண்ணீர்.

அந்த இளங் குட்டியை எடுத்தார். பசும்பால் கொடுத்தார். பசி தீரப் பருகியது. அதன்பின், அவர் மடிமேல் ஏறிப் படுத்தது. அதன் அயற்சியை அறிந்தார். உடலை வருடினார். பரிந்து முகத் தைப் பார்த்தது. கனிந்த அவர் மனம் மேலும் கசிந்தது.

அன்று முதல் அதற்கு, அவருடைய ஆதரவு கிடைத்தது. திருச்செந்தில் ஆண்டவனைக் கனிந்து வழிபடும் காலம் நீங்கலாக, பிரியமுடைய அவரை அது கணமும் பிரிவது இல்லை. மாபெரும் ஒழுக்கம் மன்னியிருந்த அவர் மனம், முன்னும் பின்னும் உன்னு கின்றது.

நாரா யணன்மருகா நான்மறையின் உட்பொருளே
வாராய் மயிலேறி அயிலேந்தி வாராயே.

சிந்தனை அலை

'அகலிகை நலம் குலைத்த ஆணவ இந்திரன், செய்த தீமையை மறைக்க வஞ்சகப் பூனை வடிவம் கொண்டான். அது போல்வது அல்ல இது!'

'ஆணவம் கெட்ட அருமை ஞானிகள், சாதாரண பூனைபோல் சந்தடியின்றி இருக்கின்றார். அந்தப் புனித மோனிகள் போல்வது இப் பூனைக்குட்டி.'

'என் குட்டிக்கு இடையூறு எய்துவது கூடாது. எங்கே கொண்டு வைக்கலாம்; எப்படி எப்படிக் காக்கலாம் என்று இடையறாது எண்ணுகின்றது தாய்ப்பூனை. நோகாமல், மென்மையாகக் குட்டியை வாயால் இனிது கவ்வி எடுக்கிறது. மறைவிடத்தில் வைக்கிறது. மாறி மாறி அதேநிலை. கருணையொடு பூனை இப்படிக் குட்டிகளைக் காப்பாற்றுகின்றது. அதைப்போல், உயிர்களை யெல்லாம் உமையாள் குமரன், அண்டங்களில், உலகங்களில், எந்த எந்த உடம்புகளிலேயோ வைத்து வைத்துக் காத்து வருகின்றான். இவைகளை எண்ணினாலே இதயம் இளகுகின்றதே! ஆம். இதைத்தானே மார்ச்சால நியாயம் என்று மறைகள் வாய் மலர்கின்றன'—என்று எண்ணுதும் எண்ணினார். நிமல இச்செய்திகளை நினைவூட்டும் குட்டிக்கு, முருகன் என்றே பெயரிட்டார். என்ன வியப்பு! எந்தப் பற்றும் இல்லாதிருந்த அவர்க்கு, வர வர அதன்மேல் பாசம் வளர்ந்தது.

சுதந்தர சூழ்நிலை

மடப்பள்ளியில் பவனி. உக்கிராணத்தில் உலாவல். இப்போது அதற்கு எந்த இடமும் சொந்த இடம். இவ்வனம் சுயேச்சையாக முருகன், எங்கும் சுற்றி வந்தது.

முதல்வன் வழிபாடு முடிந்ததும், ஐயர் திரும்பி வருவார். முருகா! எங்கே இருக்கிறாய்? என்பார். அவ்வளவுதான். கேண்மை மிக்க அவர் குரல் கேட்டதும், முருகன் எங்கு இருந்தாலும் உவகை கொண்டு ஓடி வரும்.

மியாவ்! மியாவ்!

நகைப்பார். எங்கேடா போயிருந்தாய்? என்று சொல்லிக் கொண்டே, அதற்குத் திருவமுது அளிப்பார். பாலும் தொடர்ந்து பருகத் தருவார். உண்டு உறங்கி, அவர் குழந்தைபோல் உரிமை கொண்டு வளர்ந்தது. பல மாதங்கள் இடையில் பறந்தன.

கூத்தாடும் பித்தன்றன் கோவேநின் பொற்சரணம்
ஏத்தார் தமையகல எளியேற் கருளுதியோ.

சோதனை வேதனை

செந்தில் ஆண்டவன் சேமக் கோயிலில், திருவிளக்கு ஏற்றும் திருப்பணியாளன் ஒருவன்.

விளக்கு இட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானம் ஆகும் என்று அருள் நூற்கள் அறிவிக்கின்றன. ஊழ் தந்த உத்யோகத்தை, ஒவ்வொருவரும் உவந்து போற்ற வேண்டும். வாழ்வதற்கு அதுதான் வழி.

அகத்தும் புறத்தும், **திருவிளக்கு இட்டார்தமையே தெய்வம் அறிந்திடும்; வினையும் தீரும்.** இது, சிறக்கத் தெளிந்தவர்கள் சொன்ன செய்தி.

அந்த அருமையை அவன் அறிந்திலன். அவனுடைய வாழ்க்கைச் சூழ்நிலை அப்படி. என்ன அநியாயம்! அரை வீசை நெய்யை ஒருநாள் திருடி ஒளித்தான். வீட்டிற்குப் போம் பொழுது, கொண்டு போகலாம் என்பது அவன் எண்ணம். பரம யோக்கியன்போல் பாசாங்கு காட்டி, விளக்குகளை ஏற்றிக் கொண்டே யிருந்தான்.

வளர்ந்து வரும் முருகன், அந்த இடத்திற்கு வந்தது. தூய நெய்மணம், மூக்கைத் துளைத்தது. இடம் தேடிச் சென்றது. கரந்து வைத்த நெய்யைக் கண்டது. பயனுற நெய் முழுதையும் பருகியது.

பதுக்கி வைத்தவன் பார்த்தான். கொதித்தது மனம். அண்மையில் இருந்தது ஒரு குறுந்தடி. குபீரென்று எடுத்தான். வீசி அடித்தான். வீறிட்டுப் பூனை சுருண்டு விழுந்தது.

உதிரம் ஒழுகியது. உடலை விட்டு உயிரும் ஒழிந்தது. அடித்த அவன் மனமே அதிர்ந்தது.

ஐயோ! கொடியேன் பூனையைக் கொன்று விட்டேனே! கோயில் நெய்யைத் திருடும் உரிமை எனக்கிருந்தால், அதைக் குடிக்கும் உரிமை அதற்கு இல்லையா என்ன? என்ன அநியாயம் செய்தேன் பாவி நான்! என்று, வெய்யிலில் புழுப்போல் வெம்பினன். வியர்த்தது உடல். கலகல என்று கண்ணீர் பெருக்கினன். பொருமித் துடித்துப் புலம்பினன்.

சுப்ரமண்ய ஸ்வாமிகளின் வளர்ப்புப் பூனை அல்லவா இது! அவர் அறிந்தால் என்ன ஆகும்? என்று, படபடத்தது பாழ்மனம்.

பழனி புகழ்மலைப் பதியே நினைப்பணியாப்
பழவினையால் நைந்தேன் பார்த்தேற்றுக் கொள்ளுதியோ

செய்யத் தகாத குற்றம் ஒன்றைச் செய்துவிட்டால், பெரிதும் துணிந்து அதைப் பெருக்குவது, இந்த உலக இயற்கையோ என்னவோ!

இறந்த பூனையை எடுத்தான். ஓட்டம் பெருநடை. கடல் கரை மணலில் பள்ளம் தோண்டினான். ஆஹா! அதனுள் இட்டான். மணலைத் தள்ளி மறைத்தான். எவரும் தன்செயலை அறியார் என்று, அறிந்து ஆறுதல் அடைந்தது அவன் மனம். எனினும், சாதுப் பிராணியைக் கொன்றோமே என்று எண்ணி ஏங்கி இடிந்து இருந்தான்.

சுப்ரமண்ய ஸ்வாமிகள், விமலன் ஆலயத்தில் இருந்து வெளி வந்தார். அன்று மனம் என்னமோ ஒரு மாதிரியாக இருந்தது. ஏன் இப்படி யென்று, அது அவர்க்கே தெரியவில்லை. சிறந்த பாலை நிறைத்த செம்பு, இனிது அவர் கையில் இருக்கிறது.

முருகா! முருகா!! காணோமே! எங்கே போயிருக்கும்? ஒரு குரல் கொடுத்தாலே ஓடி வருமே! நாற்புறமும் நோக்கினார். உரத்த குரலால் கூவி யழைத்தார். பல இடங்களிலும் தேடினார். யார் யாரையோ கேட்டார். பயன் இல்லை. அதிர்கிறது இதயம். ஏதேனும் நேர்ந்து விட்டதா? ஐயோ! எங்கே என் முருகன்?

விறுவிறுத்தது மனம். இறைவன் திருமுன் ஓடி வந்தார். திருச்செந்தில் அப்பா! எங்கே என் பூனை? எப்பற்றும் இல்லாத எனக்கு, இதன் மேல் பற்றை ஏன் உண்டாக்கினை? அதையும் இடையில் மறைத்தாய்! அங்கலாய்க்கச் செய்கின்றாய்! இப்படியுமா ஒரு சோதனை?

கண்டபின்தான் திருக்கோயில் திருக்கதவம் சாத்துவேன்! என்று, கண்ணீர் சிந்திக் கதறினார்.

திருவருள் பேறு

ஹா! ஹா!! மின்னியது மூலவர் திருவுருவம். அவ்வுருவில் இருந்து எழுந்தது ஒரு கிரணம். அது பளபளத்து அவர் இதயத்தில் பாய்ந்தது. ஆடியது உடல். பின்வாங்கிப் பின்வாங்கி ஆலய வாயிலை அணுகினார்.

ஹஹ்ஹாஹாஹா! ஹஹ்ஹாஹாஹா!! ஓயாது நகைக்கிறார். ஆலயத்தில் இருந்த அன்பர்கள், கதித்த அவர் உக்கிரத்தை கண்டனர். செய்வது அறியாமல் திகைத்தனர். ஓடி வந்தனர். கூடி நின்றனர். குமுறுகின்றனர். சுப்ரமண்ய ஸ்வாமிகட்குச் சிலிர்க்கிறது மேனி; எழும்பிக் குதிக்கிறார். வெடிச் சிரிப்பு. ஆஹா! பயங்கரமாய் இருக்கிறது அவர் தோற்றம்!

என்னென்ன மையல்களோ ஏற்றி வெதும்புகின்ற
அன்னசெயல் நீக்கிஎனை ஆறுமுகம் செய்யாயோ

கர்ப்பக்கிருகம் நோக்கி ஓடினார். அர்க்கிய நீர்த்தத்தை எடுத்தார். ஹஹ்ஹாஹா! இலை விபூதியை எடுத்தார். ஹஹ்ஹாஹா! நகையுடன், எம்பெருமான் திருக்கரத்து வேலாயுதத்தை எடுத்தார்.

பார்த்தவர் மனம் படபடக்க, ஹரோஹரா! என்று ஆவேச முழக்கம் செய்தார். கடல் கரை நோக்கி ஓடுகிறார்.

என்ன நேரப் போகிறதோ என்று அஞ்சிய பக்தர்கள், அவரைத் தொடர்ந்து ஓடி வந்தனர்.

கடல் கரை. மணல் மேடு. பூனை உடல் புதையுண்ட இடம். அங்கு தடைப்பட்டு நின்றார் ஆவேசகர்.

விறு விறு என்று மணலைத் தோண்டினார். சுருண்டு கிடந்தது பூனை உடல்.

திடுக்கிட்டனர் அனைவரும். ஐயோ! எவர் செய்த செயல் இது? அவரவர் தம் தம் மனம் போனவாறு எண்ணினர். வார்த்தை ஒன்றுகூட எவர் வாயிலிருந்தும் வரவில்லை. அச்சம்தான் காரணம்! நாக்கு அப்படி வரண்டு கிடக்கிறது.

ஹரோஹரா! என்று ஆவேச குதியிட்ட அவர், அர்க்கிய நீரை அதன்மேல் தெளித்தார். ஹரோஹர! இலை விபூதியை இட்டார். ம்...ம்...ம்...ம்...என்று, அதன் எதிரில் வேலாயுதத்தை ஆட்டினார். அவ்வளவுதான்.

சுருண்ட உடல் நிமிர்ந்தது. விதிர்த்தது மேனி. கண் திறந்தது பூனை. மியாவ் என்று துள்ளியது.

ஹரோஹரா என்று ஆடுகிறார் சுவாமிகள். என்ன வியப்பு! ஒரே தாவலில் மேட்டில் குதித்தது முருகன்.

அதோ சந்நிதி நோக்கி ஓடுகிறார் சுப்ரமண்ய ஸ்வாமிகள்! மியாவ்! மியாவ் என்று குரல் கொடுத்துத் தொடர்ந்து ஓடுகிறது முருகன். அதுகண்ட அன்பர் மனமெலாம் ஆடுகிறது. ஆவேசகரும், பிழைத்தெழுந்த பூனையும், சந்நிதிநோக்கி ஓடுவது கண்ட பக்தர்கள் உள்ளம் உருகியது. மெய்ம்மறந்தனர். ஆவேசம் கொண்டவர் போல், தாமும் முருகா! முருகா என்று கூவி, திமு திமு என்று தொடர்ந்து வந்தனர்.

சுப்ரமண்ய ஸ்வாமிகள், வேலவர் திருமுன் வந்து விழுந்தார். முன்கால்களை முன்னீட்டி, பின் கால்களைப் பின்னீட்டி, பரமன் திருமுன் முருகன் படுத்தது. மியாவ்! மியாவ்! யாது அதன் பொருள்?

'மேலோனே! உனக்கே அடைக்கலம்!' என்பதுதான் பொருளோ என்னவோ! அறிவார்கள் யார்?

ஆருமில்லை நின்னையன்றி ஐயா துணைபுரிவார்
பேருலகில் இத்தெளிவு பெற்றதுன்றன் பேரருளே

ஆவேசம் அகன்ற ஸ்வாமிகள், உலகியல் தெளிவுகொண்டு எழுந்தார். அடுத்து எழுந்த பூனை, பயன் தரும் அவர் காலடியில் வந்து படுத்தது. கண்டவர் யாவரும் கண்மழை பொழிந்தனர்.

படுத்த பூனையை ஸ்வாமிகள் எடுத்தார். வெளியில் கொணர்ந்தார். கனிவோடு தன்னை நோக்கும் அதைக் கண்டார். கண்ணீர் சிந்தினர். குதூகலத்துடன் அதன் உடலைத் தடவிக் கொடுத்தார். பரிவொடு பாலைப் பாத்திரத்தில் வார்த்தார். பசியகலப் பருகியபின், தாபம் தணிந்து, சந்நிதி நோக்கி, அடுத்து ஸ்வாமிகளின் பாதங்களின் மேல் ஏறிப் படுத்தது.

வாயிலாப் பிராணி. அதன் அறிவு நுட்பம் இது. அறிந்த அன்பர்கள், பரமன் அருளைப் பாராட்டி, மேலான இன்ப வெள்ளத்தில் மிதந்தனர்.

மந்திர மணியே! சுந்தர வதன செ சா ரு ப குமரா! உன் பொன்னுன திருவருளைப் புரிந்துகொண்டேன் புண்ணியனே! என்று புகழ்ந்து போற்றினர் சுப்ரமண்ய ஸ்வாமிகள். அன்று இரவு எவர்க்கும் நித்திரை வரவில்லை. எங்கும் இதே பேச்சு!

முறையீடு

மறுநாள் விடியற்காலம் 4மணி. கடன் முடித்து, நீராடி, அநுட்டித்து, திருக்கோயிலிற்குச் செல்ல, சுப்ரமண்ய ஸ்வாமிகள் திருமாளிகையி விருந்து வெளிப்பட்டார்.

ஸ்வாமீ! என்று அலறியது ஒருகுரல். திடுக்கிட்டதுமனம். யார் அது?

அவர் அடிகளில் ஓடிவந்து வீழ்ந்தான் ஒருவன்.

என்ன அப்பா! என்ன வேண்டும்?

அநியாயத் தீவினையேன் ஸ்வாமி அடியேன்! செய்யும் திருப்பணிச் சிறப்பை அறியாத சிதடன் ஆயினேன்! நியதியை மறந்தேன்! நெய்யைத் திருடினேன்! திருடி வைத்ததைக் குடித்தது பூனை என்று திகைத்தேன்! பாவத்தின் வேகத்தால் பதைத்த பாவியேன், குரூரமான தடியால் அதைக் கொன்றேன்!

மாபெரும் பாவியான என்னை மன்னிக்க வேண்டா! என்னை அடியும்! இடுப்பை ஒடியும்! புனித தங்கள் கரத்தால் அத்தண்டனை பெற்றேனே யானுல், எழுமையிலும் தேடிய என் பாவம் தீரும். தாமதமே வேண்டா! பூனை விஷயத்தில் காட்டிய இரக்கத்தை, என்பால் காட்ட வேண்டா. என்போன்ற தீமையரை, இப்பூமி சுமப்பது பாவம்! பாவம் என்று அலறி அலறி அழுதான்.

முருகா குமரா முதற்பொருளே முத்திக்கு
ஒருவா உனதடிக்கீழ் உற்றிருப்ப தென்றேயோ

ஓ! எம்பெருமான் கோயிலில் விளக்கு ஏற்றுபவன் அல்லவா நீ! நீயா இச் செயல் செய்தவன்?

மருந்துண்பவர், பத்தியம் போற்றல் வேண்டும். இன்றேல், வேறு நோய் அதனால் விளையலாம்.

பிறவி நோய் தீர்க்கும் மருந்து, நீ செய்யும் பெரிய திருப்பணி. பயனை நியதி வழுவாமையே பத்தியம். அதை மறந்தமையால் வந்த அவதியிது! தெரிகிறதா?

குற்றம் எண்ணிக் குமுறுபவரைக் குகப்பிரபு மன்னிப்பன். இனியாயினும் அறிவோடு இரு! என்று இலை விபூதியை அளித்தார். விநயமொடு வணங்கி வாங்கினன். உடலில் பூசினன். உள்ளும் புனிதம் ஆயினன்.

இன்பானுபவம்

பலநாள் சுப்ரமண்ய ஸ்வாமிகளும், முருகனும், இவ்வுலகில் இறைவனை எண்ணி இன்பமெய்தியிருந்தனர். இறுதியில், நிரதிசய ஆநந்தத்தில் நிலைத்தனர்.

இத்தகைய அடியவர் வரலாற்றிற்கு அளவில்லை. மாபெரும் அவர்களை, உலகம் வரவர மறந்து வருகின்றது. அந்தந்த ஆலய நிர்வாகிகள், தம்தம் தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்ற அடியார் உருவங்களை, அவ்வக் கோயில்களில் எழுதி வைப்பதும், அவர்கள் வரலாறுகளை, அன்பர்கள் அறிந்து மகிழ அச்சிட்டுப் பரப்புவதும் ஆன இதனினும் உயர்ந்த திருப்பணிதான் உலகத்தில் உண்டோ?

வாழ்க முருகன் அடியவர்!

பெரிய புராணச் சித்திர விளக்கம்—26

அப்பூதியடிகள்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டில் திருவையாற்றுக்கருகில் திங்களூர் என்ற ஊர் இருக்கிறது. அங்கே அப்பூதி என்ற பெயருடைய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். சிறந்த ஒழுக்கமும் விரத ஒழுக்கமும் உடையவர் அவர். களவு முதலிய தீய குணங்கள் யாவும் இல்லாதவர். இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகினர்.

வருகருணை வள்ளிமண வாளா நீ வாழ்வளிக்க
அருகணை நாள் என்றேயோ அயில்மயிலும் கொண்டோனே

அவருக்குத் திருநாவுக்கரசரிடம் அளவற்ற பக்தி இருந்தது. அப்பர் சுவாமிகளை நேரே கண்டறியா விட்டாலும், அவர் புறச் சமயத்திற்குச் சென்று இறைவனால் தடுத்தாட் கொள்ளப் பெற்றதும், அரசன் செய்த தீங்கினின்றும் சிவ பிரான் அருளே துணையாக நின்றதும், உய்ந்ததும் முதலிய வரலாறுகளைக் கேட்டறிந்து அவரிடம் பேரன்புடையவ ராக இருந்தார். தம் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கெல் லாம் மூத்த திருநாவுக்கரசு, நடுத் திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்று பெயர் வைத்தார். பசுவுக்கும் எரு மைக்கும், படி முதலிய அளவு கருவிகளுக்கும் அந்தப் பெயரை வைத்தார்.

அப்பூதியந்தணர் செல்வமுடையவராதலின் மடம், தண்ணீர்ப் பந்தல், வாவி முதலிய தர்மங்கள் பலவற்றைச் செய்தார். எல்லாவற்றுக்கும் திருநாவுக்கரசர் திருநாமத் தையே வைத்தார். தண்ணீர்ப் பந்தலுக்குத் திருநாவுக்கர சர் தண்ணீர்ப் பந்தல் என்றும், திருக்குளத்துக்குத் திருநா வுக்கரசர் திருக்குளமென்றும், இப்படியே மற்றவைகளுக் கும் பெயரிட்டு பக்தியோடு வழங்கி வந்தார்.

திருநாவுக்கரசர் பல தலங்களை வழிபட்டுக் கொண்டு திருப்பழனத்துக்கு வந்து, இறைவனைத் தரிசித்து விட்டு அருகிலுள்ள வேறு தலங்களையும் தரிசிக்கப் புறப்பட்டார். வரும் வழியில் திங்களூரைக் கண்டார். அங்கே எப்போ தும் மக்கள் போய்க் கொண்டிருக்கும் சாலையில் ஒரு தண் ணீர்ப் பந்தர் மிக்க குளிர்ச்சி நிலவுவதாக இருப்பதைக் கண்டார். அதில் எங்கே பார்த்தாலும் திருநாவுக்கரசர் என்ற பெயர் எழுதியிருப்பதைக் கண்டு வியப்படைந்தார். பின்பு, “இந்தப் பந்தலுக்கு இந்தப் பெயரிட்டவர் யார்?” என்று அருகில் இருந்தவர்களைக் கேட்டார். அவர்கள், “இவ்வூரில் உள்ள அப்பூதியடிகளே அப் பெயர் வைத் திருக்கிறார். இதற்கு மட்டும் அன்று. குளம், சோலை முத லிய பலவற்றிற்கும் அந்தப் பெயரை வைத்திருக்கிறார்” என்றார்கள்.

பழனி புரியரசே பன்னிரண்டு தோளுடையாய்
தொழஅருள்நீ நின்னடியே அன்பருளம் தோய்வானே

அதைக் கேட்ட அப்பருக்குப் பின்னும் வியப்பு மிகுதி யாயிற்று. 'என்ன கருத்தால் இப்படிச் செய்திருக்கிறார்?' என்று சிந்தித்தும் புலனாகவில்லை.

"அப்பூதியடிகள் எவ்விடத்தில் உள்ளவர்?" என்று அவர் கேட்டார். "அந்த வேதியர் இவ்வூர்க்காரர் தாம். இத்தனை நேரம் இங்கே தான் இருந்தார். இப்போது தான் தம் வீட்டுக்குச் சென்றார். அந்த வீடும் அருகில்தான் இருக்கிறது" என்று அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள்.

உடனே நாவுக்கரசர் அப்பூதியடிகளின் வீட்டை நாடிச் சென்று வாயிலை அணுகும்போதே, வீட்டுக்குள் இருந்த அந்தணர் யாரோ சிவனடியார் வந்திருக்கிறார் என்பதைக் கேட்டுப் புறத்தே வந்தார். வந்து அப்பருடைய அடியைப் பணிய அவரும் அப்பூதியைப் பணிந்தார். "தாங்கள் என் இல்லத்துக்கு எழுந்தருளியதற்கு நான் என்ன தவம் செய்தேனோ! எளியேனால் ஆகும் காரியம் ஏதேனும் உண்டோ?" என்று பணிவுடன் அப்பரை அவர் கேட்டார்.

"நான் திருப்பழனத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபட்டு விட்டு வருகிறேன். வழியில் நீங்கள் வைத்த தண்ணீர்ப் பந்தலைக் கண்டேன். வேறு பல தர்மங்களும் நீங்கள் செய்வதை யறிந்து உங்களைப் பார்க்க வந்தேன். ஒரு சந்தேகம்" என்றார்.

"என்ன?" என்று அப்பூதியடிகள் கேட்டார்.

"சிவனடியார்களுக்குப் பயன்படும்படி நீங்கள் வைத்திருக்கும் தண்ணீர்ப் பந்தரில் உங்கள் பெயரை எழுதாமல் வேறு யார் பெயரையோ எழுதியிருக்கிறீர்களே, என்ன காரணம்?" என்றார்.

இதைச் செவியுற்ற அப்பூதியடிகளுக்குக் கோபம் உண்டாயிற்று. அப்பர் சுவாமிகளுடைய பெருமையை அறியாமல் இவர் பேசுகிறாரே என்ற நினைவுதான் காரணம்.

"நீங்கள் சொல்லுவது நன்றாக இல்லையே! சமணர் பேச்சைக் கேட்டு இன்னல் செய்த மன்னவனுடைய சூழ்ச்சியைத் திருத்தொண்டு வலிமையால் வென்ற பெரியாருடைய திருநாமத்தையா வேறு யார் பேரோ என்று சொல்கிறீர்?

பூண்டவனே பேரருளை, சோதிபரி பூரணனே
ஆண்டவனே பத்திமுத்தி அருள்புரியக் காணேனே

இறைவன் திருவடித் தொண்டு புரிந்தால் மறுமையிலே இன்பப் பேறு பெறுவது மாத்திரம் அன்று. இம்மையிலும் தீங்கு நீங்கி நலம் பெற்றுய்யலாம் என்பதை என் போல்வாரும் தெளியும்படி அருட்செயல் புரிந்த திருநாவுக்கரசருடைய திருப்பெயரை இங்கே எழுதியிருக்க, நீங்கள் வெய்ய வார்த்தை சொன்னீர்களே! கல்லைக் கட்டிக் கடலில் போட்டபோது அந்தக் கல்லே தெப்பமாகக் கரையேறிய அந்தப் பெருமானுடைய பெருமையை உலகத்தில் அறியாதவர்களும் உண்டா? சிவ வேடப் பொலிவுடன் இருக்கும் நீங்கள் இப்படிப் பேசுவது வியப்பாக இருக்கிறதே! நீங்கள் எங்கே இருப்பவர்கள்? நீங்கள் யார்?" என்று படபடப்புடன் கேட்டார்.

அப்பர் சுவாமிகளுக்கு அடிகள் உள்ளக் குறிப்பும் அவருக்குள்ள பக்தியும் புலனாயின. "வேறு துறையினின்றும் மீண்டு வருவதற்காக இறைவன் அருளிய சூலை நோயால் ஆட்கொள்ளப் பெற்று, மீட்டும் அவனை அடைந்து உய்ந்த அறிவிலாச் சிறியேன் அடியேன்" என்று பணிவாகச் சொன்னார்,

அதைக் கேட்டதுதான் தாமதம்; அப்பூதியடிகள் மெய்ம் மறந்தார். அவர் கைகள் தாமே தலைமேல் குவிந்தன. கண்ணில் அருவி பொழியத் தொடங்கியது. உரை குழறியது. உடம்பெல்லாம் புளகம் போர்த்தது. தரையில் வீழ்ந்து அப்பருடைய திருவடியைப் பற்றிக் கொண்டார். அப்பரும் அப்பூதியடிகளை வணங்கிக் கையால் எடுத்துவிட, அடிகள் ஆனந்தக் கடலில் மூழ்கிக் கூத்தாடினார்; ஓடினார்; பாடினார். இன்னதுதான் செய்வதென்று தெரியவில்லை. வீட்டுக்குள் போய் தம் மனைவி மக்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்து அவர் காலில் விழச் செய்தார்.

பின்பு அப்பரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று திருவடியை நீரால் விளக்கி அந்நீரைத் தெளித்துக் கொண்டு உண்டார். பிறகு ஆசனத்தில் அமரச் செய்து திருநீறு ஏந்தி, "இங்கே அமுது செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய அவரும் அதற்கு உடன்பட்டார்.

"என்ன பேறு பெற்றேம்!" என்ற பேருவகையுடன் தம்முடைய மனைவியாரிடம் கூறி இனிய விருந்துணவு சமைக்கச் சொன்னுர். அப் பெருமாட்டியாரும் பேரன்புடன் அறுசுவை உணவு சமைக்கத் தொடங்கினர். எல்லாம் சமைத்து முடியவே, அமுது படைக்கத் தோட்டத்துக்குச் சென்று வாழை இலை அரிந்துகொண்டு வரும்படி தம்முடைய முதல் மகனுகிய மூத்த திருநாவுக்கரசை அனுப்பினுர்.

அவன் மிக்க விரைவில் சென்று பெரிய வாழை மரம் ஒன்றில் உள்ள குருத்தை அரியும் போது அங்கே இருந்த பாம்பு அவன் கையைக் கடித்துவிட்டது. கையைச் சுற்றிக்கொண்ட பாம்பை உதறிவிட்டு மிக்க பதைப்புடன், "இந்த நஞ்சுவேகம் ஏறுவதற்கு முன் நான் இக் குருத்தைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்" என்று எண்ணி ஓடிவந்தான். நிகழ்ந்ததை யாருக்கும் சொல்லாமல் இதைக் கொடுத்துவிடலாம் என்று எண்ணி ஓடும் போது, விஷம் மெல்ல மெல்ல அவன் தலைக்கு ஏறியது. வீட்டை அடைவதற்குள் அவன் உடம்பு நீலம் பாரித்துவிட்டது. வீட்டுக்கு எப்படியோ சென்று தாயார் கையில் வாழைக் குருத்தை அளித்து அப்படியே விழுந்து உயிர் நீத்தான்.

அதைக் கண்ட தாயாரும் தந்தையாரும் உள்ளம் பதைத்து உற்று நோக்கும் போது, உடம்பிலுள்ள குறிகளால், பாம்பு விஷத்தால் இறந்தான் என்று தெரிந்துகொண்டனர். அதனுல் துயரம் அடையாமல், 'கிடைத்தற்கரிய பெரும் பேருக இங்கே வரப்பெற்ற அப்பருக்கு அமுது செய்விக்கக் காலம் தாழ்க்கிறதே!' என்று வருந்தித் தம் மகன் உடலை ஒரு பாயில் சுருட்டி ஒரு மூலையில் மறைத்து வைத்து அப்பரிடம் வந்தார்கள். அமுது செய்தருள வேண்டும்" என்று பணிவுடன் சொல்லி அவரை அழைத்துச் சென்று திருவடி விளக்கி ஆசனத்தில் இருத்திஞர்கள். அப்பர் அவ்வாசனத்தில் இருந்து வெண்ணீறு அணிந்து அப்பூதியடிகளுக்கும் அவர் மனைவியாருக்கும் புதல்வர்களுக்கும்

உன்பதத்தை உன்னுமல் உண்டுறங்கி வாழ்வதுவே
துன்பப் பிறவிதனில் தோய்க்குமென ஓர்ந்தேனே

நீறு அளித்தார். அப்போது, "உங்கள் மூத்த பிள்ளை எங்கே? அவனையும் அழையுங்கள், திருநீறு அளிக்க' என்றார்.

அப்பூதியடிகள் சற்றே உள்ளம் கலங்கி என் செய்வ தென்று விழித்தாலும் உடனே தேறி, " அவன் இப்போது இங்கு உதவான்" என்றார். அதைக் கேட்ட அப்பருக்கு, ஏதோ உள்ளத்தில் ஒரு தடுமாற்றம் உண்டாயிற்று. "நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. என் மனசுக் கும் சமாதானம் உண்டாகவில்லை. உண்மை என்ன? சொல்லுங்கள்" என்று அவர் கேட்டார்.

'இப் பெரியார் அமுது செய்ய இயலாதவாறு தடை வந்துவிட்டதே!' என்று வருந்தினாலும் உண்மையை உரைக்காமல் இருக்கக் கூடாது என்று எண்ணி நிகழ்ந் ததை அப்பூதியடிகள் சொன்னார். அதுகேட்ட நாவுக் கரசர், "ஆ! நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள். தமக் குற்ற துயரையும் மறந்து இப்படிச் செய்வார் யார் இருக் கிறார்கள்!" என்று வியந்தபடியே எழுந்து சென்று, அவர் களுடைய திருமகன் சடத்தை அணுகி வெளியே எடுத்து வரச் செய்தார். உடனே இறைவனை நினைந்து "ஒன்று கொலாம்" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். பதிகம் நிறைவேறியவுடன் மூத்த திருநாவுக்கரசு துயிலினின்றும் எழுபவனைப் போல விஷம் தெளிந்து எழுந்தான். எழுந்து அப்பரை வணங்க, அவர் புனித நீறு அளித்தார்.

இந்த அற்புதத்தைக் கண்டு அப்பர் சுவாமிகளின் பெருமையையும், தொண்டு நெறியின் சிறப்பையும் யாவரும் நினைந்து பாராட்ட, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும், "அறிய முடியாத பெருமையை உடைய இப் பெரியார் திரு அமுது செய்யச் சிறிது தாமதம் உண்டாகச் செய்தான் இவன்" என்று சிறிதே மனம் நொந்தனர். அது கண்ட திரு நாவுக்கரசர் உடனே உள்ளே சென்று அமுது செய் தருளினார். தங்கள் மனம் குளிர அடிகளும் மனைவியாரும் உபசாரம் செய்தார்கள்.

கொடைத்தலைமைகொண்டவரும்கொள்பவரும்நின்னிடத்தில்
அடைக்கலம் ஆவதனை யானறிந்தேன் பூரணனே

அங்கே சில காலம் அப்பர் தங்கிப் பின்பு திருப்பழனம் என்னும் தலத்துக்கு எழுந்தருளினர். அவருடைய உள்ளத்தில் அப்பூதியடிகளுடைய அன்பு ஆழமாகவும் பதிந்து விட்டது. அதனால் அத்தலத்தில் வழிபட்டுத் திருப்பதிகம் பாடுகையில், இறுதிப் பாசுரத்தில் "அஞ்சிப் போய்க் கலி மெலிய அழலோம்பும் அப்பூதி, குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே" என்று அப்பூதியடிகளைச் சிறப்பித்தார்.

திருநாவுக்கரசர் தம் வீட்டுக்கு எழுந்தருளியதைப் பெரும் பேருகப் போற்றி உவகைக் கடலுள் ஆழ்ந்த அப்பூதியடிகள், தம்முடைய அறச் செயல்களில் வழுவாமல் நெடுங்காலம் வாழ்ந்தார்.

இறைவனுடைய அடியாராகிய அப்பர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரே. அப்பூதியடிகளுக்கு அப்பர் குருவும் தெய்வமுமாக விளங்கினர். நமக்கு இருவரும் நாயன்மார்களாக விளங்குகிறார்கள். அரன் அன்பருக்கும், அடியார் அன்பருக்கும் வேறுபாடு இல்லை என்ற உண்மை இதனால் புலனாகிறது.

திருப்புகழ்

விரிவுரை

(திருப்பரங்குன்றம்)

(குகஸ்ரீ)

கனகம் திரள்கின்ற பெருங்கிரி
தனில் வந்து தகன் தகன் என்றிடு
கதிர்மிஞ்சிய செண்டை எறிந்திடு கதியோனே!
கடமிஞ்சி அநந்த விதம்புணர்
கவளந்தனை உண்டு வளர்ந்திடு
கரியின் துணை என்று பிறந்திடு முருகோனே!

பனகம் துயில்கின்ற திறம்புனை
கடல்முன்பு கடைந்த பரம்பரர்
படரும்புயல் என்றவர் அன்புகொள் மருகோ
[னே!

பலதுன்பம் உழன்று கலங்கிய
சிறியன் புலையன் கொலையன் புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே;
அனகன் பெயர் நின்றுரு ளும்திரி
புரமும் திரி வென்றிட இன்புடன்
அழலுந்த நகும்திறல் கொண்டவர் புதல்வோ
[னே!

அடல்வந்து முழங்கி யிடும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டெென
அதிர்கின்றிட அண்ட நெரிந்திட வருசூரர்
மனமும்தழல் சென்றிட அன்றவர்
உடலும் குடலும்கிழி கொண்டிட
மயில் வென்தனில் வந்தருளும் கன பெரியோ
மதியும் கதிரும் தடவும்படி [னே!
உயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளமொன்று பரங்கிரி வந்தருள் பெருமாளே!

(1) பஞ்சம் தவிர்த்த பரன்!

'கனகம்......கதியோனே.'

(பதவுரை.) கனகம் திரள்கின்ற-பொன் உருவாகிப் பொலிகின்ற; பெரும் கிரிதனில் வந்து - பெரிய மேரு மலைச் சாரலில் வந்து (அதன் மேல்); தகன் தகன் -, என்றிடு- என்று ஒலிக்கிற; கதிர் மிஞ்சிய-ஒளி மிகுந்த; செண்டை - செண்டு எனும் ஆயுதத்தை; எறிந்திடு - வீசியடித்த; கதியோனே-உக்கிரப் போராற்றல் உடையவனே! (எ - று).

நிலத்தின் நடுவில் நிற்கின்றது மேருமலை. தரணியை வேர்களால் தாங்கும் அம்மலை, ஏராளமான பொன்னை யுடைமையால் பொன்மலை என்றும் பெயர் பெறும். அம் மலையைக் காவல் செய்கிறது ஒரு அதி தேவதை.

ஒரு காலத்தில் பஞ்சத்தால் தவித்தது பாண்டி நாடு. அந்நாட்டை ஆண்ட அபரசுப்ரமண்ய அம்ச உக்கிரகுமார

கலியுகத்தில் நீயே கண்கண்ட தெய்வமென்பார்
மலிவளத்தைப் பெற்றுய்வர் மயிலை வருமணியே

பாண்டியர், சிறந்த மேருவிடம் சென்றார். அதிதேவதையைக் கூவி அழைத்தார். ஏன் என்ற பதில் இல்லை; தேவதை எதிர் வரவும் இல்லை. உக்கிரம் கொண்டார். செண்டு எனும் ஆயுதத்தை எடுத்தார். ஓங்கி மலைமேல் அடித்தார். அதிர்ந்தது மேரு. அபயக் குரல் கொடுத்து எதிர்வந்தது தேவதை. உக்கிரர் குறிப்பை உணர்ந்தது.

அதோ ஒரு குகை. அதனுள், பாண்டி நாட்டில் செலாவணியாகும் பொன் நாணயங்கள் ஏராளமாக இருக்கின்றன. எடுத்துச் செல்லலாம் என்று தேவதை எதிர்வணங்கி மறைந்தது. குகையுள் புகுந்தார் குமாரர். வேண்டும் அளவு பொன்னை எடுத்தார். உணவுப் பொருள்களை, தாராளமாகப் பிற நாடுகளில் இருந்து தருவித்தார். பாண்டி நாட்டுப் பஞ்சம் தவிர்த்தார் என்பது இந்த அடியில் உள்ள வரலாறு.

அன்று பஞ்சத்தில் அடிபட்ட பஞ்சைகள் போல், அடியேனும் இன்று பல துன்பம் உழன்று பரிதபிக்கிறேன். கனிவு கொண்டு அவர்களை அன்று காத்ததுபோல், குமரேசா! எளிய என்னையும் இன்று ஏற்றருள் என்பது உள்ளுறை. காக்கும்' கருணையின் வேகத்தைக் காட்டுகின்றது, கதியோனே என்னும் விளி.

(2) விக்கினம் தவிர்க்கும் விமல பரம்பரை

'கடமிஞ்சி......மருகோனே'

(ப-ரை.) கடம்மிஞ்சி-பெருங் (கருணை) மதம் பெருகி; அநந்த விதம் புணர்-(ஆன்ம பரிபாகத்திற்குத் தக்கபடி) பலவகையாக (அவைகளில்) ஊடுருவி உறவுகொண்டு; கவளந்தனை-(ஆன்ம போதத்தை) ஒருவாய் உணவு ஆக; உண்டு-உட்கொண்டு; வளர்ந்திடு - வளர்கின்ற; கரியின் துணை என்று-யானை முக கணபதியின் தம்பி என்று; பிறந்திடு-தோன்றிய; முருகோனே-பிரணவப் பொருள் ஆனவனே!; (எ-று).

ஆற்றில் அவதரித்த ஆறுமுகா நின்னடியைப்
போற்றில் சிவயோக போகமுண்டு புண்ணியனே

சர்வ சமய சமரசகணபதி, உயிர்கட்கு மறதிதரும் ஏழ்மைப் போதத்தை ஏன்றுகொண்டு, உலகமே யான மேனியாகி உயர்கின்றார். விக்கினம் தவிர்க்கும் அவர் பின்னவனை நீ, அறியாமைச் சேற்றில் கலங்கிய என் கலக்கத்தைத் தவிர்த்து காத்தருள் என்பது, இந்த அடியில் இருக்கின்ற செய்தி.

"உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும் தறி நிறுவி, உறுதியாகத் தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி, இடைப்படுத்தி, தறுகண் பாசக் கள்ளவினை பசுபோதக் கவளமிடக் களித்துண்டு, கருணை என்னும் வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வரு வினைகள் தீர்ப்பாம்"என வரும் மதுரைக் கணபதி துதி, இங்கு நம் நினைவிற்கு வருகிறதல்லவா!

கணபதி பிரணவ முகர்; ம்+உ—மு; ர்+ உ—ரு; க்+அ—க எனவாதலின், முருகனும் பிரணவ சொருபம் எனலை யறிவோம்; அதற்கேற்ப, கரியின் துணை என்று பிறந்திடு முருகோனே என்றார்.

(3) அமுது ஊட்டுவான் அன்பு மருகன்

'பனகம்......மருகோனே'

(ப-ரை.) பனகம்-ஆதிசேடன் (மேல்); துயில்கின்ற திறம் புனை-அறிதுயில் கொள்ளும் ஆற்றல் பெற்ற;-கடல்-பாற்கடலை; முன்பு-முன்னொரு காலத்தில்; கடைந்த-(அமுது உதவக்) கடைந்த; பர அம்பரர்-ஞானகாய நினைவினரான; படரும்-(விண்ணில்) இயங்கும்; புயல்-மேகம் போலும் நிறமுடையார்; என்றவர்-என்று சொல்லப் பெறும் திருமால்; அன்புகொள் மருகோனே-மாபெரும் ஆர்வம் கொண்ட மருமகனே! (எ-று).

உறங்குவான் தலைமேல் பாம்பு ஒன்று படமெடுத்து நிழல் கொடுத்தால், அவன் அரசன் ஆவான் என்று அறிவிக்கின்றார் மேலோர். ஆயிரம் தலை ஆதிசேடன் நெடிய படங்கள் நிழல் தர, பரந்தாமன் அதன் மேல் படுத்திருக்கின்றார்; அஃதொன்றே அவர் பெருமையை அறிவிக்

நாதா சிவகிரிவாழ் நம்பா சிவமணியே
தாதா அருளமுதம் தாதா தணிகையனே

கின்றது. ஆன்மாக்களுக்கு! எப்படி எப்படி அருளலாம் என்று இடையறுது எண்ணும் துயில், அவர் கொள்ளும் அறிதுயில். மேலும் அந்நிலை, ஒருவகைத் தியான யோகமும் ஆகும்.

வாழ்வாங்கு வானோர் வாழ, அப்பெருமான், தான் இருக்கும் கடலையே கடையும்படி தந்தார். மாபெரும் மத்து ஆன மந்தரமலை, தாழாதபடி கடலில் ஆமையாகித் தாங்கினார். பலகாலம் கடைந்தபின் தெய்வ அமுதம் திரண்டது. அழகு மோகினி ஆகி, அசத்துக்களான அவுணரை மயக்கி, அமரர்க்கே உண்ண அமுதை உதவினார். சத்துக்களைக் காக்க வெண்ணிறப் பாற்கடலில் இருந்த நீலமேக அந்த நிமலர் மாபெரும் அன்பு கொண்ட மருகா! தேவர்கள் சிறுமையைத் திருமால் தீர்த்தவாறு, சிற்றறிவுடைய **சிறியவன்** ஆன என் சிறுமை இன்றோடு தீர நீ இனிது அருள் என்றபடி.

(5) மலம் கெடுத்தோன் மைந்தன்

'அடல்......பெரியோனே'

(**ப-ரை**) அனகன்பெயர் நின்று-சிவனார் திருநாமம் (நீடிய தலைவர் மூவரால்) நிலைத்து; உருளும் திரிபுரமும்-(தலைகீழாகப்) புரளும் மூன்று பட்டணங்களும்; திரிவு என்றிட-மாறுபட்டன என்று (மாதவர்) உரைக்க; இன்புடன்-இன்பமுடன்; அழல்-நெருப்பையும்; **உந்த - உந்திச்** செல்லும்படி; நகும்-புன்சிரிப்புச் செய்யும்; திறல் கொண்டவர் புதல்வோனே - ஆற்றல் படைத்த அமலர் அருளிய குமரேசா! (எ-று).

பொன் மதில், வெள்ளி மதில், இரும்பு மதில் என மூவாத கோட்டைகள் மூன்று. ஒவ்வொன்றிற்கும் தலைவர் ஒருவர்; ஒவ்வொன்றிலும் அளவிறந்த அவுணப் பிரஜைகள். தலைவர் மூவரும் சிவ பக்தியில் சிறந்தவர். அதனால், மாபெரும் நிர்வாகத்தை மறந்தனர். குடிகள் போக்கு கொடுமையோ கொடுமை. எல்லாரும் தலைவிரிச்சான் தம்பிரான்களாயினர். எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பள்ளுப் பிரபந்தம் பாடினர். சீர்மாறுகக் கோட்டைகளைச் செலுத்

தினர். மேலும் கீழும் இறக்கி ஏற்றினர். அமரர் முனிவர் களை அலக்கழித்தனர்.

சிரித்தது சிவம். உடனே எழுந்தது இன்ப ஒளி. அதன் பின் நெறுநெறு என்று நின்றது நெருப்பு. ஊன்றி அந் நெருப்பை உந்தியது நகை. இன்பஒளி, மூவர் தலைவரை மொய்த்தது; அதனால் அவர்கள் இறவா நிலையை எய்தினர்.

எழுந்த நெருப்பு முப்புரத்தை எரித்தது. அவைக ளொடு அவுணர் அனைவரும் அழிந்தனர். இங்ஙனம் சிரிக் கும் சிரிப்பு சிவத்திற்கே உரிய சிறப்பு. முப்புர தகனம் மும்மல கண்டனம் என்பது பிண்ட நுட்பம். மலகண்டன சிவகுமரா! **புலையன்** எனும் பெயரால், வெறும் புலால் மய மான ஆக்கையே நான் என மயங்கி யிருக்கும் அடியேற்கு, நீர்தான் தெளிவு பிறப்பிக்க வேண்டும் என்பது இந்த அடி யில் உள்ள செய்தி.

(6-7) ஆணவ கண்டன அருளாளன்

'அடல்-சூரர்......கிழிகொண்டிட...வந்தருளும் கன பெரியோனே'

அடல் வந்து-(போரில்) அடுதல் செய்ய (ஆக்கிர மித்து) வந்து; முழங்கியிடும் பறை-பெரிது ஒலிக்கும் யுத்த பேரிகை; டுடு டுண்டுடு டுண்டுடு டுண்ட்-, என அதிர் கின்றிட-என்று அதிர; அண்டம் நெரிந்திட-(ஆயிரத் தெட்டு) அண்டங்களும் இடிபாடு பெற;

வருசூரர்-வந்த சூரபன்மன் முதலானோருடைய; மன மும் தழல் சென்றிட-அகமும் (புறம்போல்) தீப் பாய- அன்று-(எதிர்த்த) அந்நாளில்; அவர் உடலும் குடலும்- அவர்களது உடல்களும் (வயிற்றுக்) குடல்களும்; கிழி கொண்டிட-கிழிபட; மயில் வென்தனில் வந்தருளும்-மயில் முதுகில் எழுந்தருளி வந்த; கன பெரியோனே-பெருமை பொருந்திய பெரியோனே! (எ-று).

இருள்மய சூரபதுமன் இமயவரைச் சிறையிட்டான். மனசாட்சியைக் கொன்றோம். சிவாபராதம் தேடினோம்; அதனால் வந்தவினை இது என்று அமரர் அறிந்தனர். படாத பாடு பட்டனர். ஆறுமுக அப்பா வருக என்று கதறி யழுதனர். இரக்கம் மிக்க செந்தில் எம்மான், அம ரரை விடுதலை செய்என்று அறிக்கை அனுப்பினன். 'போர் மிகுத்த சூரன், விடோம் விடோம்' என்று எம்பெருமானைப்

படைகளுடன் எதிர்த்தான். அந்த ஆணவ சொருபத்தை, பிரணவ மயில்மேல் இருந்து பெருமான் பேதித்தான். உள் பொருள் நுட்பம் இதனை, ஊன்றி உணர்ந்தால் உள்ளம் உருகும்.

செவி வடிவம் ஓம். அதனில் நுழை ஒலியும் ஓம். வாய் திறந்தால் ஆரம்பம் ஓம். உலகமே ஓம். அதன் மேல் பொருளாவான் முருகபிரான். இதைச் சிந்திக்கத் தடை விதிக்கிறது சீர்கெட்ட ஆணவம். அதை உணர்ந்தவர்கள் ஞானிகள். அவர்கள் புறமுகம் மறந்து அகமுகம் ஆவர். அங்நிலையில் காட்சியாகி, ஆணவத்தைப் புறங்காட்டும் ஆறுமா முகம். அதன் பின் விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

அந்தோ! இவைகளை யறிந்தும், கொலையன் என்னும் பெயர் கொண்டு, மனசாட்சியைக் கொன்று மடங்கும் என்னை நீர் மன்னிக்கவில்லை யெனில், என் கதி அதோ கதி தான் என்னும் குறிப்பு, இந்த ஆறு ஏழாம் அடிகளின் இருக்கின்றது அல்லவா!

(8) சாதனையில் சம்பந்தன்

'மதி......பரங்கிரி வந்தருள் பெருமாளே'.

(ப-ரை.) மதியும் கதிரும்-சந்திரனும் சூரியனும்; தடவும்படி-வருடிச் செல்லும்படி; உயர்கின்ற வனங்கள் பொருந்திய- (வானோக்கி) உயர்ந்து வளர்ந்த சோலைகள் சூழ்ந்த; வளம் ஒன்று-வளப்பம் பொருந்திய; பரங்கிரி-திருப் பரங்குன்றத்தில்; வந்தருள்-எழுந்தருளிய; பெருமாளே-(பிரமம் எனும்) பெரிய பொருள் ஆனவனே! (எ-று).

திரு-அருள்; பரம்-மேலிடம்; கிரி-நிலையம்; திருப்பரங் கிரியின் பல நுட்பங்களுள் இப்படியும் ஒரு பொருள். மதி-சந்திர கலை; பரிதி-சூரிய கலை; இரு கலைகளும் நியதிபெற நிகழ்ந்தால், அருள் மேலிடத்தான் இனிது அருள்வன் என்பது இறுதியடியில் இருக்கும் செய்தி.

கதியோனே! முருகோனே! மருகோனே! புதல்வோனே! பெரியோனே! பெருமாளே என, ஓம் பொருள் ஆவானை ஓங்கார நாதமெழ அடிதோறும் ஒலிட்டு அழைத்தார். அதன் பின் வருகிறது வேண்டுகை.

life's prize is really won. Sri Ramachandra instructs Sri Baratha that all men must, while yet young, learn and aquire true gnana or wisdom. For, according to Sri Rama's advice, through gnana alone can man get beyond human sorrows and sufferings, and through gnana alone can one perceive the ways of God-mind which man lives only to accomplish. The disappointments of life are man-made, and a trained and proper outlook on the will of God will enable man to convert his disappointments and miseries into Ananda. The Lord comes down to earth and walks the lonely distance with pain and sorrow only to demonstrate that through pain and sorrw, in the unshakeable adherence to truth and dharma, man gets installed in the acquisition of Divine Ananda. With this instruction or upadesam Bharatha's bakthi attained the fruition of realisation. All glory to Sri Ramachandra !!

—Thiruppugal Mani

கன்னி தனக்குக் கையீந்தாய்
    கவியால் ஈரற் குயிரளித்தாய்
மன்னும் பொய்யா மொழியார்க்கும்
    மலர்மேல் அயற்கும் மதிகொடுத்தாய்
மின்னும் பொதிகை முனிவற்கும்
    மீளாப் பொருள்தந் தாயெற்கே
என்ன அளித்தாய்? போரூர்வாழ்
    இறையே முருகப் பெருமானே !

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

104

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18